Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, OCTOBER 21, 2024

திங்கட்கிழமை, ஒக்டோபர் 21, 2024 | ஒளி: 10 கதிர்: 075 | பக்கம்:10 | நகரப்பதிப்பு | FREE

வரி செலுத்தும் பதிவை

## ரத்து செய்ய முடியும்

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வரி செலுத்துவதற்கு பதிவு செய்திருந்தால், நியாயமான காரணத்திற்காக வரி செலுத்த போதுமான வருமானம் அல்லது இலாபம் இல்லை என்றால், அந்த வருமான வரி செலுத்தும் பதிவை ரத்து செய்ய முடியும் என உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் செபாலிகா பாண்டுசேகர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2




ஜனாதிபதிக்கு வழங்கிய காலக்கெடு நிறைவு

# “கைதுக்கு அஞ்சேன்”

## இரு அறிக்கைகளையும் இன்று அம்பலப்படுத்துவேன்

**அறிக்கைகள் கிடைத்தமை தொடர்பில், விசாரிக்கப்படும் என ஏற்கெனவே தெரிவித்திருந்தது அரசாங்கம்**

**விசாரணை ஆணைக்குழு அறிக்கைகள் இரண்டும் முன்னாள் ஜனாதிபதி ரணிலிடம் கையளிக்கப்பட்டிருந்தன**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளியிடப்படாமல் இருந்த இரண்டு அறிக்கைகளை வெளியிடுவதற்கு ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் திங்கட்கிழமை (21) காலை 10 மணியுடன் நிறைவடைவதாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க 21ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்குள் வெளியிடவில்லையாயின் தான் வெளித் தயாராகவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில், ஞாயிற்றுக்கிழமை (20) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த ஓய்வு பெற்ற நீதியரசர்களான எஸ்.ஐ.இமாம் மற்றும் ஏ.என்.ஜே.அல்விஸ் ஆகியோர் தலைமையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கைகள் இரண்டும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

தொடர்ச்சி P2



சர்வஜன அதிகாரத்தால் மட்டுமே

## “எதிர்க்கட்சியை கட்டியெழுப்ப முடியும்”

சர்வஜன அதிகாரத்தால் மட்டுமே துணிச்சலான வலுவான எதிர்க்கட்சியை கட்டியெழுப்ப முடியும் என அதன் தலைவரும் கம்பஹா மாவட்ட வேட்பாளருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

குருநாகலில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட போதே இதனை தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## ஒரு குடும்பமே தீயில் கருகியது

சிலாபம், சிங்கபுர பிரதேசத்தில் வீடொன்று தீப்பிடித்ததில் 15 வயது சிறுமி உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் 51 வயதுடைய வர்த்தகர் சேனாரத்ன (தந்தை) 44 வயதான மஞ்சுளா நிரோஷனி பண்டார (தாய்) மற்றும் 15 வயதான ஏ. நேத்மி நிமேஷா (மகள்) ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## எரிபொருள் விலை குறைக்கப்படுமா?



எரிபொருள் விலை, மின்சாரக் கட்டணம் மற்றும் அரச துறை சம்பளம் தொடர்பான வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாக, முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை விமர்சித்துள்ளார்.

நவம்பர் 1 ஆம் திகதிக்குள் எரிபொருள் விலை கணிசமாக குறைக்கப்படும் என கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என அரசாங்கத்திடம் காஞ்சன விஜேசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.

## “தமிழ் தேசியக் கூட்டமைப்பை நான்தான் உருவாக்கினேன்”

தமிழ் தேசியக் கூட்டமைப்பை நான்தான் உருவாக்கினேன். தலைவரிடம் விடயத்தை எடுத்துக் கூறி தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று முடிவெடுத்து அதனை உருவாக்கினேன். மட்டக்களப்பில் இருந்து உருவாகிய கருதான் அந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு என மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயேட்சையாக பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## முகப்புத்தக களியாட்ட நிகழ்வு 30 பேர் போதையுடன் கைது

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா கிரகறி வாவி கரையோரத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற முகப்புத்தக களியாட்ட நிகழ்வொன்று சுற்றிவளைக்கப்பட்டதில் போதைப்பொருட்களுடன் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் சனிக்கிழமை (19) மாலை இடம்பெற்றுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர் .வரெலியா பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் போதைப்பொருட்களுடன் முகப்புத்தக (பேஸ்புக்) களியாட்ட நிகழ்வொன்று நடைபெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## அரச வாகனங்கள் ஒப்படைக்கிறார் மஹிந்த

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட ஆறு உத்தியோகபூர்வ வாகனங்களில் அம்பியூலன்ஸ் உட்பட மூன்று உத்தியோகபூர்வ வாகனங்கள் திங்கட்கிழமை (21) ஜனாதிபதி செயலகத்தில் கையளிக்கப்பட உள்ளதாக முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



தொடர்ச்சி P2

## “உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டம் வேண்டும்”

எமது நாட்டில் இந்த துரதிஷ்டவசமான, சூழ்நிலையில் குழந்தைகள், சிசுக்கள், தாய்மார்கள் மற்றும் பெண்களின் உரிமைகள் நாளுக்கு நாள் மீறப்படுவதைக் காணமுடிகிறது. சுகாதார அமைச்சின் அறிக்கைகளின்படி, குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு குறித்த செய்திகள் நம்பிக்கை தருவதாக இல்லை. எனவே, சிறுவர், பெண்களின் உரிமைகள் வலுவாக பாதுகாக்கப்பட வேண்டும்.



**“இந்நாட்டில் பெண்கள், தாய்மார்கள் மற்றும் சிறுவர் தலைமுறைக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். சிறுவர்கள் மற்றும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் முதன்மையான அம்சமாக அமைந்து காணப்பட வேண்டும்**

தொடர்ச்சி P2

## “பயணிக்கும் பாதை அவ்வளவு நல்லதல்ல”



புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க செல்லும் இந்த பாதையை பார்க்கும் போது மக்கள் மீண்டும் சிரமத்திற்குள்ளாவார்கள் என்பது தெளிவாகின்றது என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

“நாடு மீண்டும் எந்த வகையிலும் வீழ்ச்சியடையும் பட்சத்தில், முன்னர் செய்தது போன்று அனுபவமிக்க அணியுடன் இணைந்து மக்களைக் கவனிப்போம்” எனவும் அபேவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்தின் ஒரு எழுத்தையாவது மாற்றினால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும் என தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒட்டுமொத்த இலங்கை மக்களும் தோற்றுப் போயுள்ளனர் எனவும் தெரிவித்தார். தேசிய கட்சியின் விசேட குழு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே வஜிர அபேவர்தன இதனை தெரிவித்தார்.

## “இந்தியாவை எதிர்த்து விட்டு எதனையும் செய்ய முடியாது”



அதிகாரப்பகிர்வையும், 13ஆவது திருத்தச்சட்டத்தையும் வடக்கின் அரசியல்வாதிகள் கோரவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது நீண்டகாலமாக எமது மக்களின் கோரிக்கையும், அபிலாசையுமாகும்.

அரசியலமைப்பின் அங்கமாக உள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறே நாம் கோருகிறோம் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இந்தியாவை புறந்தள்ளிவிட்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கம் செயல்பட பார்க்கிறது. ஆனால், இந்தியாவுடன் அனுசரித்து செல்வதே அவர்களுக்கு நல்லதாக இருக்கும் எனவும் செல்வம் அடைக்கலநாதன் எச்சரிக்கை விடுத்தார்.

அதிகாரப்பகிர்வு மற்றும் 13ஆவது திருத்தச்சட்டங்களை வடக்கின் அரசியல்வாதிகளே கோருகின்றன. மாறாக மக்கள் அல்ல என அண்மையில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, தெரிவித்திருந்தார். இது தொடர்பில் ‘ஒருவன்’ பத்திரிகைக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறியதுடன், மேலும் அவர் வலியுறுத்தியதாவது,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “கைதுக்கு அஞ்சேன்”

இந்நிலையில் கடந்த 14ஆம் திகதி திங்கட்கிழமை ஊடக சந்திப்பை நடத்திய பிவிதுரு ஹெல உறுமயக் கட்சியின் தலைவர் உதயகம்மன்பில அந்த அறிக்கைகள் தன்னிடம் இருப்பதாகவும், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அந்த அறிக்கைகளை மக்களுக்கு வெளிப்படுத்தவில்லையாயின் தான் வெளியிடத் தயாராகவுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கு கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை ஊடக சந்திப்பில் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் விஜித்த ஹேரத் அந்த அறிக்கை எவ்வாறு உதய கம்மன்பிலவுக்கு கிடைக்கப்பெற்றது என விசாரிப்பதாகவும் அவர் அந்த அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க 3 நாள் கால அவகாசம் வழங்குவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இத்தகைய பின்னணியில் ஜனாதிபதி அந்த அறிக்கைகளை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தவில்லையாயின் தான் அந்த அறிக்கைகளை திங்கட்கிழமை (21) வெளியிடவுள்ளதாக, ஞாயிற்றுக்கிழமை (20) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்த உதயகம்மன்பில, தன்னை கைது செய்துவிடுவார்கள் என்று ஒருபோதும் அஞ்சவும் மாட்டேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஒரு குடும்பம் தீயில் கருகியது

உயிரிழந்த நெத் நிமேஷாவின் மகள் சிலாபம் ஆனந்த தேசிய பாடசாலையின் மாணவியாவார்.

இந்த சம்பவம் சனிக்கிழமை (19) இரவு இடம்பெற்றிருக்கலாம் என சிலாபம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், ஞாயிற்றுக்கிழமை (20) காலை ஆறு மணியளவில் இந்த வீடு தீப்பற்றி எரிவதாக சிலாபம் தலைமையகப் பொலிஸாருக்கு நபர் ஒருவர் அறிவித்ததையடுத்து, பொலிஸார் சென்று சோதனையிட்ட போது, வீட்டினுள் சடலங்கள் எரிந்து கொண்டிருப்பதைக் கண்டனர். பொலிஸாரின் மேலதிக விசாரணையில், சடலங்கள் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கழுத்து அறுக்கப்பட்டிருந்ததை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த மரணங்களுக்கான காரணத்தை பொலிஸார் இதுவரை வெளியிடவில்லை என்பதுடன் சிலாபம் தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ரத்து செய்ய முடியும்

வணிக நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதாலும், வருமான ஆதாரங்கள் இல்லாததாலும் வரி செலுத்த முடியாது என்பதை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களுடன் அருகிலுள்ள உள்நாட்டு வருவாய் அலுவலகத்திற்கு கோரிக்கை விடுத்தால், வருமான வரிக்கான பதிவை முடக்கலாம் என திருமதி பாண்டுசேகர தெரிவித்துள்ளார்.

2023/24 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான அறிக்கையை 01.04.2023 முதல் 31.03.2024 வரை இணையத்தளத்தில் சமர்ப்பிக்கும் வசதியை 30.11.2024 க்கு முன்னர் இணையத்தளத்தில் சமர்ப்பிக்கும் வசதியை காட்டப்பட்டுள்ள இ-சேவையை அணுகுவதன் மூலம் பெறலாம் என்று உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

# “தமிழ் தேசியக் கூட்டமைப்பை நான்தான் உருவாக்கினேன்”

அவரது தேர்தல் அலுவலகமொன்று மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு தேர்தல் தொகுதிக்குட்பட்ட மகிழூர் கிராமத்தில் சனிக்கிழமை (19) மாலை திறந்துவைத்துவிட்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் இதன்போது மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களிலே நான் ஒருபோதும் தேசிய கட்சிகளிலும், தேர்தல்களிலும் களமிறங்கவில்லை. அம்பாறை மாவட்டத்திலும் நான் தனி தமிழ் கட்சியிலே தான் தேர்தலில் களமிறங்கி இருந்தேன். இம்முறையும் நான் மட்டக்களப்பில் தேசிய ஜனநாயக முன்னணி எனும் தமிழ் கட்சியிலேதான் போட்டியிடுகிறேன். தேசிய கட்சியில் நாங்கள் தேர்தலில் களமிறங்கினால் நிச்சயமாக அதில் மூன்று முஸ்லிம் வேட்பாளர்களை களமிறக்குவார்கள்.

எம்முடைய வாக்குகள் அவர்களைத்தான் வெற்றிபெற வைக்கும். அதனால்தான் நாங்கள் தேசியக் கட்சிகளில் தேர்தலில் களமிறங்கவில்லை. அதனால்தான் இம்முறையும் நாங்கள் எட்டு தமிழ் வேட்பாளர்களோடு மட்டக்களப்பு மாவட்டத்தில் களமிறங்கி இருக்கின்றோம்.தமிழ் தேசியக் கூட்டமைப்பை நான்தான் உருவாக்கினேன். தலைவரிடம் விடயத்தை எடுத்துக் கூறி தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று முடிவெடுத்து அதனை உருவாக்கினேன்.

> **அந்தக் கடமையை ஆரம்பத்தில் அவர்கள் நன்றாக மேற்கொண்டிருந்தார்கள். அதனை நான் வரவேற்கின்றேன். சம்பந்தன் ஐயா இருக்கும்போது அதுநன்றாகத்தான்செயற்பட்டது. அவர் மரணித்ததன் பின்னர் அவர்கள் சிதறுண்டு போய்விட்டார்கள்**

மட்டக்களப்பில் இருந்து உருவான கரு தான் அந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு. அதனை தலைவர் ஏற்றுக்கொண்டு கூட்டமைப்பை உருவாக்கினார். அக்காலத்தில் யுத்தம் நடைபெற்றபோது எமது மக்களின் இழப்புக்கள், யுத்த அழிவுகள் உலக அரங்குக்கு தெரிய வர வேண்டும். அது பாராளுமன்றத்தில் பேசப்பட வேண்டும். தமிழர்களின் குரல்கள் பாராளுமன்றத்தில் ஒலிக்க வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

அந்தக் கடமையை ஆரம்பத்தில் அவர்கள் நன்றாக மேற்கொண்டிருந்தார்கள். அதனை நான் வரவேற்கின்றேன். சம்பந்தன் ஐயா இருக்கும்போது அது நன்றாகத்தான் செயற்பட்டது. அவர் மரணித்ததன் பின்னர் அவர்கள் சிதறுண்டு போய்விட்டார்கள். காலப்போக்கில் அவர்கள் பணத்துக்கு அடிமையாகி பதவிகளுக்கு ஆசைப்பட்டு சிதறிப் போயுள்ளார்கள். இதுதான் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வரலாறாகும்.

வடக்கு, கிழக்கிலே இருக்கின்ற தமிழ் மக்களுக்கு ஒரு காத்திரமான தலைமைத்துவத்தை வழங்குவதற்காக வேண்டி நான் இந்த தேர்தலிலே மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுகிறேன்.

# “எதிர்க்கட்சியை கட்டியெழுப்ப முடியும்”

அவர் மேலும் தெரிவித்ததாவது: “சர்வஜன அதிகாரத்தை நாங்கள் தொலைநோக்கு பார்வையுடன் கட்டமைத்துள்ளோம். எங்களிடம் இருந்து மறைந்து வரும் நமது தேசபக்தியைக் காப்பாற்ற விரும்புகிறோம். நாங்கள் ஒரு மூலோபாய அரசியல் பயணத்தை மேற்கொள்கிறோம்.

இந்த அரசியல் பயணத்தை நாங்கள் தைரியமாக எதிர்கொள்கிறோம்.இந்தத் தேர்தலில் நாங்கள் பிரதமராகப் போட்டியிடவில்லை, துணிச்சலான எதிர்க்கட்சியாகப் போட்டியிடுகிறோம். சரி என்றால் சரி, தவறு என்றால் தவறு, தவறு எனில் வேலையை நிறுத்தும் அளவுக்கு துணிச்சலான எதிர்க்கட்சிகளை உருவாக்குவோம்.

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரை மீண்டும் அங்கு அமர வைப்பதால் மக்களுக்கு என்ன மகிழ்ச்சி ஏற்படப் போகிறது? எரிவாயு சிலிண்டர் என்பது ரவி கருணாநாயக்கவின் கட்சி. அவரை தேசிய பட்டியலில் எம்.பியாக்கவே அவர்கள் அனைவரும் நாடு முழுவதும் தேர்தல் பிரசாரத்திற்காக ஓடுகிறார்கள். எங்களின் பதக்கம் மக்களின் கழுத்தில் தொங்கும் தேசத்தின் நம்பிக்கை பதக்கம்" என்றார்.

# “இந்தியாவை எதிர்த்து விட்டு எதனையும் செய்ய முடியாது”

”அபிவிருத்தி என்பது மக்களுக்கு முக்கியம். அதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், அரசியலமைப்பில் உள்ள ஒரு விடயத்தை இல்லையெனக் கூற முடியாது. 13ஆவது திருத்தச்சட்டம் மாகாண சபை முறைமைகளுக்காக அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பொன்றின் ஊடாக மாகாண சபை முறையை இல்லாதொழிக்க முடியும். ஆனால், இதனை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். எமது மக்கள் இனப்பிரச்சினையாலும் போராலும் பாதிக்கப்பட்ட மக்கள். அவர்கள் வெறும் அபிவிருத்தியை மாத்திரம் எதிர்பார்ப்பதாக ரில்வின் சில்வா கருத கூடாது.

வடக்கின் அரசியல்வாதிகள்தான் அதிகாரப்பகிர்வை கோருவதாக கூறுவது பிழையான கருத்தாகும். அரசியலமைப்பில் உள்ள விடயத்தைதான் நாம் கோருகிறோம். இதில் அரசியல்வாதிகளை தொடர்புப்படுத்துவது தவறு. இது எமது உரிமையாகும்.

13ஆவது திருத்தச்சட்டம் என்பது இந்திய  இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாகதான் அரசியலமைப்புக்குள் உள்வாங்கப்பட்டது. இதனை இல்லாதொழிக்க முற்படுவது இந்தியாவுக்கு எதிரான ஒரு முயற்சியாகவே பார்க்கப்படும். புதிய அரசாங்கத்துக்கு இந்தியாவை அனுசரித்து போக வேண்டிய தேவை உள்ளது. அண்டைய நாடாக உள்ள இந்தியாவை எதிர்த்துவிட்டு எதனையும் செய்ய முடியாது.

இவர்களுடைய கருத்துகள் 13ஆவது திருத்தச்சட்டத்தை புதிய அரசியலமைப்பில் இருந்து இல்லாதொழிக்கும் வகையில் உள்ளது. ஆனால், இந்தியாவை பகைத்துக்கொண்டு இவர்களால் நகர முடியாது.” என்றார்.

# “உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டம் வேண்டும்”

அவர்களின் உரிமைகள் அடிப்படை உரிமையாக பாதுகாக்கப்பட வேண்டும் என்று சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஆரோக்கியமான சிறுவர் தலைமுறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கும் பங்களிக்கும் ஒன்றாக அமைந்து காணப்படுகிறது. தாய்மார்கள் மற்றும் பெண்களின் போசாக்கின்மை, சிசுக்களின் போசாக்கின்மை மற்றும் குழந்தைகளின் போசாக்கின்மை வளர்ச்சி ஆகியவை ஆரோக்கியமான தலைமுறை உருவாக்கத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகிறது.

ஈஸ்டர் தாக்குதல், கொரோனா கோவிட் மற்றும் வங்குரோத்து ஆகிய மூன்று பாதிப்புகள் கடுமையான பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. இதனால், குழந்தைகள், சிசுக்கள், தாய்மார்கள், பெண்கள் என அனைத்து தரப்பினரும் பாதிக்கப்படுகின்றனர், பெண்களின் உரிமைகள் கூட தொடர்ந்து மீறப்பட்டு வருகின்றன. வீட்டில், வீதியில், வேலை செய்யும் இடங்களில் பெண்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். 52% பெண்கள் வன்முறையால் பாதிக்கப்படுவதால், தாய்மார்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களை மையமாக் கொண்ட புதிய சட்டம் இயற்றப்பட வேண்டும்.

அதேபோன்று, ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றியின் பின்னர் பொருளாதார, சமூக, கலாச்சார, மத, அரசியல் உரிமைகள் மனித உரிமைகள் அடிப்படை உரிமைகளாக வலுப்படுத்தி புதிய சட்ட வகுப்பாக்கத்துக்குச் செல்வோம். இந்த பாரதூரமான பிரச்சினையில் இருந்து விடுபட முடியாது. இந்நாட்டில் பெண்கள், தாய்மார்கள் மற்றும் சிறுவர் தலைமுறைக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். சிறுவர்கள் மற்றும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் முதன்மையான அம்சமாக அமைந்து காணப்பட வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி இதனை நடைமுறைத்த நடவடிக்கை எடுத்து செயற்படும். என மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்மலானை தேர்தல் தொகுதி கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பொன்று ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் தலைவரான சஜித் பிரேமதாச தலைமையில் இரத்மலானையில் இடம்பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்மலானை தேர்தல் தொகுதி அமைப்பாளர் வைத்தியர் சமல் சஞ்சீவ அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்திற்கு கட்சி செயற்பாட்டாளர்கள் பலர் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# அரச வாகனங்கள் ஒப்படைக்கிறார் மஹிந்த

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் அரசியல் தலைவர்களில் அச்சுறுத்தலுக்கு உள்ளான அரசியல்வாதி என்ற பின்னணியில் அவரது பாதுகாப்பிற்காக இந்த உத்தியோகபூர்வ வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அரச புலனாய்வு சேவையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# முகப்புத்தக களியாட்ட நிகழ்வு 30 பேர் போதையுடன் கைது

இதன்போது 6 கிராம் 90 மில்லி கிராம் கேரள கஞ்சா, 12 போதை மாத்திரைகள், 1380 மில்லி கிராம் குஷ் போதைப்பொருள், 400 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், 150 மில்லி கிராம் கொக்கைன் போதைப்பொருள் உட்பட பல்வேறு போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அவற்றை வைத்திருந்த 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் அனைவரும் ஆண்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் 20 முதல் 38 வயதுடையவர்கள் எனவும் அவர்கள் அனைவரும் வெளி பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஒய்வு பெற்ற 63 வயதான அதிபருடன் 21 வயதானஇளைஞன் ஓரினச்சேர்க்கை

கனகராசா சரவணன்

ஏறாவூரில் ஓய்வு பெற்ற 63 வயதான அதிபர் ஒருவருடன் ஓரினசேர்க்கையில் ஈடுபட்ட 21 வயதான இளைஞன், அதனை வீடியோவாக எடுத்து அவரிடம் அச்சுறுத்தி கப்பமாக 25 ஆயிரம் ரூபாய் பணம் கோரியிருந்த நிலையில், அவ்விளைஞன், சனிக்கிழமை (19) கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இளைஞன், வேறு ஒரு பாடசாலையில் கல்விகற்று வந்துள்ளான். அங்கு சிறுமி ஒருவருடன் ஏற்பட்ட தகாத உறவை அடுத்து, அவ்விளைஞன், கைது செய்யப்பட்டு, குறித்த அதிபர் 2014 ஆம் ஆ ண்டு கடமையாற்றிய பாடசாலைக்கு இடமாற்றப்பட்டு அனுமதிக்கப்பட்டான்.

இந்த நிலையில் குறித்த சிறுவனுடன் அதிபர் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டுவந்துள்ளார். அதிபர் கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்றுள்ளார். சிறுவனும் இளைஞனாகி, பாடசாலை கல்வியை முடித்து வெளியேறியுள்ளான். எனினும், இருவரும் தொடர்ந்து ஓரின சேர்க்கையில் ஈடுபட்டுவந்துள்ளனர். அதனை அவ்விளைஞன் இளைஞன் வீடியோ எடுத்துள்ளான்.

இந்நிலையில், இந்த உறவு தொடர்பில் தான் எடுத்து வைத்திருக்கும் வீடியோவை வெளியிடுவேன் என அச்சுறுத்தி, 9 இலட்சம் ரூபாய் பணம் தருமாறு கோரியுள்ளான். இளைஞனிடம் பணம் வழங்கியதற்கான கடிதம் ஒன்றை வாங்கி கொண்டு அந்த பணத்தை அதிபர் அவனுக்கு வழங்கியுள்ளார்.

இதன் பின்னர் குறித்த இளைஞன் தனக்கு 5 இலட்சம் ரூபாய் பணம் தருமாறும் அல்லது வீடியோவை வெளியிடப் போவதாக அச்சுறுத்தியுள்ளான். இந்நிலையில் 25 ஆயிரம் ரூபாய் மட்டும் தருவேன் என தெரிவித்துவிட்டு தனக்கு நேர்ந்த கதி தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸாரின் ஆலோசனைக்கமைய குறித்த இளைஞனை வெளியிடம் ஒன்றிற்கு அதிபர் வரவழைத்து பணத்தை வழங்கும் போது அங்கு மாறவேடத்தில் இருந்த பொலிஸார் அந்த இளைஞனை சுற்றிவளைத்து மடக்கி பிடித்து கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை நீதிமன்றில் ஆஜர்படுத்து நடவடிக்கையினை மேற்கொண்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பெண்ணின் சடலம் மீட்பு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள கூளாவடி பிரதேசத்தில் பெண்ணொருவர் தீயில் எரிந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை (20) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கூளாவடியைச் சேர்ந்த 67 வயதுடைய 3 பிள்ளைகளின் தயாரான வி.விஜயராணி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

குறித்த பெண்ணிற்கு எற்பட்டுள்ள சக்கரை வியாதி காரணமாக ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக சம்பவதினமான ஞாயிற்றுக்கிழமை (20) பகல் வீட்டின் முற்றத்தில் தனக்கு தானே மண்ணெண்ணெயை ஊற்றி தீ வைத்துக்கொண்டு உயிரிழந்துள்ளார்

பொலிஸார் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு கொண்டுச் சென்றுள்ளனர்.



# கண்காட்சி...

■ வி.ரி.சகாதேவராஜா

தொழில் முயற்சிகளுக்கு பெண்களை வலுவூட்டடல். எனும் தொனிப்பொருளின் கீழ்,மாதர் உற்பத்தி செய்த பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் காரைதீவில் சனிக்கிழமை (19) இடம் பெற்றது.

இதில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவஞானம் ஜெகராஜன் கலந்து சிறப்பித்தார்.

அங்கு, மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தினரால் உற்பத்தி செய்த பொருட்களை காட்சிப் படுத்தி, விற்பனையும் செய்யப்பட்டதுடன் இதன் போது காரைதீவு பிரதேச மாதர் சங்கங்களினால் முன்னாள் பிரதேச செயலாளரும் தற்போதைய மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமான சிவ.ஜெகராஜன் மற்றும் சிறப்பாக பயிற்சிகளை முடித்த மாணவர்கள் அதன் ஆசிரியர் மற்றும் மாதர் அபிவிருத்தி சங்க தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர்கள் கௌரவப்படுத்தி பாராட்டப்பட்டனர்.


















## “பொருளாதாரத்தில் பெண்களை

# வலுவூட்டுவதே இன்றைய தேவை”

■ எம்.யூ.எம்.சனூன்

நாட்டின் சனத்தொகையில் 52 சதவீதமாக காணப்படும் பெண்களை பொருளாதார ரீதியில் பலம் மிக்கவர்களாகவும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க கூடியவர்களாகவும் வலுவூட்டுதல் இன்றைய அவசிய தேவையாக உள்ளது என நெப்ஸோவின் கற்பிட்டி இணைப்பாளர் கலாபூஷணம் ஜே.பத்மநாதன் தெரிவித்தார்.

உலக உணவு தினத்தை (ஒக்டோபர் 16) முன்னிட்டு பிரஜா அபிலாஷை திட்டத்தின் ஊடாக புத்தளம் மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு அமைப்பின் அனுசரணையில், கற்பிட்டி ஆணைவாசல் கிராமத்தில் உள்ள சதா சரன பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சதா சரன பெண்கள் அமைப்பின் தலைவி எஸ். தயாணி ரொசில்டா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், உரையாற்றுகையில்,

உணவு உற்பத்தியில் நாம் கவனம் செலுத்தும் வண்ணம் வீட்டுத் தோட்டங்களை உருவாக்கும் வகையில் அவர்களுக்கான வீட்டுத்தோட்டம் அமைத்தல் தொடர்பான பயிற்சிகள், இரசாயனங்கள் அற்ற இயற்கை முறையிலான கிருமி நாசினிகள் மற்றும் கொம்போஸ் பசளை தயாரிப்பு பயிற்சிகளை வழங்கி வருகிறோம்.

பெண்களை பலப்படுத்தல் என்பனவற்றை நோக்கங்களாக கொண்டு எமது வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வின் போது கலந்து கொண்ட சகல பெண்களுக்கும் வீட்டுத்தோட்டத்திற்கான மரக்கறி விதைகள் வழங்கப்பட்டதுடன் சதா சரன பெண்கள் அமைப்பில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுயதொழில் மேற்கொண்டு வரும் ஒரு சுய தொழிலாளியை வலுவூட்டும் முகமாக சுயதொழில் உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# பிரத்தியேக செயலாளர் துப்பாக்கிச் சூட்டில் மரணம்

கண்டி மாவட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஒருவரின் பிரத்தியேக செயலாளராக கடமையாற்றிய ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகி, பலத்த காயங்களுடன் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை (20) உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் மஹிய்யாவ பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளது. குறித்த நபர் சுட்டுக்கொள்ளப்பட்டாரா? அல்லது தன்னைத்தானே சுட்டுக் கொண்டாரா, என்பது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கண்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த பண்டார நாயக்க தெரிவித்தார்.

# தேயிலைக்குள் மறைத்த ஐஸுடன் ஒருவர் கைது

சுமார் இருபத்தைந்து கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப்பொருளை தேயிலை தூள் பொதிகளில் கடத்தி வந்த விமானப் பயணி ஒருவர், கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால், வெள்ளிக்கிழமை (18) இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பு- தெமட்டகொட பிரதேசத்தில் வசிக்கும் 35 வயதுடைய வர்த்தகர் ஆவார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர், மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து MH-179 என்ற மலேசியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளதுடன் அவரின் பயணப் பையை சோதனையிட்ட போது தேயிலை தூள் அடங்கிய பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 கிலோ 179 கிராம் ஐஸ் போதைப்பொருள் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.



# இடையூறு விளைவித்த வர்த்தகர் கைது

ஹட்டன் டிக்கோயா நகர சபையின் வருமான பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்து நகரசபை வாகனம் மீது தாக்குதல் நடத்திய வர்த்தகர் ஒருவர் சனிக்கிழமை (19) கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட வர்த்தகர், ஹட்டன் நகரின் நடைபாதையை, பாதசாரிகளால் பயணிக்க முடியாத அளவிற்கு மறைத்து மரக்கறி வியாபாரம் செய்வதாக நகரசபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய அதை அகற்றச் சென்ற போது குறித்த பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்து வாகனம் மீதும் தாக்குதல் நடாத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொண்ட விசாரணைகளின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அந்த வர்த்தகர் இதற்கு முன்னரும் இவ்வாறான பல வன்முறை சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டடு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


நம் நாட்டில் நிதிப் பற்றாக்குறையால் எவரும் இதய நோயால் இறக்கவோ அல்லது பாதிக்கப்படவோ கூடாது.

**ஹார்ட் டு ஹார்ட் அறக்கட்டளை நிதியம்**, வைத்தியர். ராஜித வை டி சில்வாவினால் (இருதய அறுவை சிகிச்சை நிபுணர்) அவரது வழிகாட்டியான வைத்தியர். ருவன் ஏக்கநாயக்க (சிரேஷ்ட இருதயநோய் நிபுணர்) உடன் இணைந்து 2014 இல் நிறுவப்பட்டது.

இதய நோய்களுக்கான முக்கியமான மருத்துவத் தலையீட்டை அணுகுவதில் சமூகத்தின் பின்தங்கிய பிரிவினர் எதிர்கொள்ளும் கஷ்டங்கள் நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வருகிறது. வைத்தியர. டி சில்வா மற்றும் வைத்தியர். ஏக்கநாயக்க ஆகியோர் திரு. பாலித பெர்னாண்டோ பி.சி., திரு. அருணாஷாந்த டி. சில்வா பி.சி., திரு. மகேந்திர அமரசூரிய, லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் டயஸ் (ஓய்வு), திரு. அஜிதா டி சொய்சா, திரு. குமார் சங்கக்கார உட்பட 16 அறங்காவலர் குழுவை நிதியத்தின் செயற்பாடுகளை வழிநடத்திச் செல்வதற்கும், அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தன்னார்வலர்களை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்கும் கொண்டு வந்தனர்

இந்த நிதியானது **‘அபயதானய’ திட்டத்தைக் கொண்டுள்ளது.** இது சக ஆண்டுவிழா, பிறந்தநாள் அல்லது திருமணம் போன்ற முக்கியமான நாளில் வழக்கமான கொண்டாட்டத்தை நாடாமல் மனிதனின் உயிரைக் காப்பாற்றுவதில் முதலீடு செய்வதற்கு பொதுமக்களுக்கு வாய்ப்பளிக்கிறது.

அறக்கட்டளை நிதியின் கணக்குகள் ஆண்டுதோறும் எர்ன்ஸ்ட் மற்றும் யங்கால் கணக்காய்வு செய்யப்படுகின்றன.

உங்கள் வாழ்க்கை முடிவடைய போகிறது, நீங்கள் உதவியற்றவர் என்பதை அறிவது ஒரு பரிதாபமான நிலை. தற்போது ஆசிர்வாதம் என்னவெனில், இப்போது நம்மால் அதற்கு ஏதாவது செய்ய முடிகிறது. எந்த உயிரும் மற்றொன்றை விட விலை உயர்ந்ததல்ல!

ஆனால் வளங்கள் குறைவாகவே உள்ளன என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம், அதனால்தான் நாங்கள் குடும்ப பிரதானிக்கு உதவ முயற்சிக்கிறோம், எனவே அவர்களின் உயிர்வாழ்வு முழு குடும்பத்திற்கும் உதவுகிறது.

இதயத்திலிருந்து இதயம், நம்மை மனிதனாக்கும் வாக்குறுதியாகும்.



மேலும் தகவலுக்கு அல்லது நன்கொடை வழங்க, www.heart2hearttrust.org ஐப் பார்க்கவும்

வெற்றியின் 10 ஆண்டுகள்
ரூ. 90 மில்லியன் பெறுமதியான
650 இதய அறுவை சிகிச்சைகள்

அறங்காவலர் குழு: வைத்தியர் ராஜித வை.டி சில்வா, வைத்தியர் ருவன் ஏ.ஐ. ஏக்கநாயக்க, திரு. பாலித பெர்னாண்டோ பிசி, திரு. அருணஷாந்த டி சில்வா பிசி, வைத்தியர் அருண கபுருகே, வைத்தியர் மகேந்திர முனசிங்க, வைத்தியர் கனிஷ்க இந்திரரத்ன, திரு. மகேந்திர அமரசூரிய, கலாநிதி குமாரி ஜெயவர்தன, திரு. சுதத் தென்னகோன், (ஓய்வுபெற்ற) லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் டயஸ், திரு. சுனிமல் பெர்னாண்டோ, திரு. அஜிதா டி சொய்சா, திரு. குமார் சங்கக்கார, வைத்தியர் குமுதினி ரணதுங்க

# ஒருங்கிணைத்து ஓர் அறிக்கையாக உருவாக்குவதே சிறந்தது

பொதுத் தேர்தலுக்கான விருப்பு வாக்குகளை அள்ளிக்கொள்வதற்கான களச்சமர் சூடுபிடித்திருக்கும் நிலையில், ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பிலான கதையாடல்களும் பொதுவெளியில் மீண்டும், பேசப்படும் பொருளாகிவிட்டது. இதனால் மீண்டும் உற்சாகமடைந்த சந்தர்ப்பவாதிகள் இந்த தலைப்பை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்த ஆரம்பித்துவிட்டனர்.

*2019 ஏப்ரல் 21* அன்று ஈஸ்டர் தாக்குதல் நடந்தது. வர்த்தக நகரத்தில் உள்ள மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் மூன்று ஹோட்டல்களை குறிவைத்து தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன். அந்த தாக்குதல்களின் தொடர், தெமட்டகொட வீட்டுத் தொகுதியில் நிறைவடைந்தது.

அப்போதிருந்து, தாக்குதல் ஓர் அரசியல் கால்பந்தாக மாறியது. ஆட்சி மாற்றத்திற்கான புகலிடமாக இருந்தது. ஈஸ்டர் தாக்குதல் அரசியல் தேவைக்காக கையாளப்பட்டது. பல விலைமதிப்பற்ற உயிர்கள் பறிக்கப்பட்டன. அதைப் பற்றிய கணக்கீடும் உள்ளது. பொருள் உடைமைகள் மற்றும் நிரந்தரமாக ஆதரவற்ற மக்களை மதிப்பீடு செய்யலாம். அவை புனரமைக்க முடியாத நினைவுகள் என்றாலும், அவற்றைப் பற்றிய மதிப்பீடு நம்மிடம் உள்ளது.

இந்த நிலைமையை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மீண்டும் கையில் எடுத்துள்ளார். பெரும் ஆணைக்குழுக்களை விசாரணைக்கு பயன்படுத்தி திருப்திப்படுத்த முடியாத இந்த விஷயத்தை மீண்டும் அவர் கையில் எடுத்துள்ளார். இதனூடாகவும் அரசியல் தேடவே முயற்சிக்கின்றார்.

ஈஸ்டர் தாக்குதல்களை பயன்படுத்தி அரசியல் செய்வதற்கான நேரமல்ல. பாதிக்கப்பட்டவர்கள், நீதி, நியாயம் கிடைக்கவேண்டும். இவ்வாறானதொரு தாக்குதல்கள் இனிமேலும் இடம்பெறாதவகையில், பாதுகாப்பு நடவடிக்கைளை முன்னெடுக்கவேண்டும். தற்கொலைத்தாக்குதல்களை நடத்தும் அளவுக்கு சாதாரண மனிதர்களை மூளைச்சலவை செய்யும் தரப்பினரை கண்டறியவேண்டும். சாதாரண மக்களிடத்தில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவேண்டும்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக தற்போதுள்ள அனைத்து அறிக்கைகளையும் ஒருங்கிணைத்து ஓர் அறிக்கையாக உருவாக்க வேண்டும் என்பது உண்மைதான். அனைத்து வகையான விசாரணைகளும் ஒரு முடிவுக்கு இட்டுச் செல்ல வேண்டும். மறுபுறம், உயர் நீதிமன்றம் தலையிட்டு வழக்கை ஒரு வகையான பெரிய வழக்காக மாற்ற வேண்டும். அங்கிருந்து இறுதியாக, ஆரம்பத்தை எடுக்கலாம்.

அத்தகைய ஒரு பொறிமுறைக்கான விவாதங்கள் மேற்கொள்ளப்படுவது இப்போது இன்றியமையாததாகும். ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் இப்பிரச்னைக்கு அங்குதான் தீர்வு உள்ளது. அதிலிருந்து வெளிவரும் அனைத்தும் விபரங்களையும் ஒற்றாக திரட்டி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இல்லையேல், இன்னும் ஐந்தாண்டுகளுக்கு பின்னரும், இதனையே கதைத்துக்கொண்டிருப்பார்கள். அதனூடாக அரசியல் தேடவே முயற்சிகளை மேற்கொள்வார்கள் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமே இல்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்புலம் அம்பலப்படுத்த வேண்டும். அதனை விசாரணைக்குழுகளை மீண்டும், மீண்டும் அமைத்து இழுத்தடிக்கும் முயற்சியில் ஈடுபடக்கூடாது. அந்த சம்பவத்துக்கு முற்றுப்புள்ளிவைக்கும் வகையில் நிரந்தரமான தீர்வை பெற்றுக்கொடுக்கவேண்டும் என்பதே எமது வலியுறுத்தலாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# அனுர- நேர்மையான இடதுசாரியம்?

லக்ஸ்மன்

“சுயநிர்ணயம் என்பது ஒரு மாக்சிச கருத்து நிலை. இதனை வளர்த்தெடுத்தவர் லெனின். இந்தக் கருத்து நிலையிலும் மாக்சிச கோட்பாட்டின் அடிப்படையிலும் இயங்குபவர் ஜனாதிபதி மற்றும் அவருடைய கட்சி. தமிழர்களும் சுயநிர்ணயத்தினை முன்வைப்பவர்கள் அதற்காகப் போராடியவர்கள். ஆகவே தமிழர்கள் ஒத்த கருத்துடையவர்களுடன்தான் இணைய வேண்டும். அவ்வாறானால்தான் வெற்றியும் அடைய முடியும்.

அதனைவிடுத்து வலதுசாரிகளுடன் இணைவது சாத்தியமற்றது. நாங்கள் கேட்கும் சுயநிர்ணய உரிமையினை அடையவும் முடியாது. இதுதான் நாங்கள் விட்ட அரசியல் தவறு.” என்று மட்டக்களப்பிலுள்ள கலாநிதி ஒருவர் கருத்தொன்றைப் பகிர்ந்திருந்தார்.

உண்மையில் இது ஒரு நல்ல கருத்தே. இந்த மாக்சிச அடிப்படையை ஆரம்பத்திலிருந்து இப்போதுவரை ஜே.வி.பி. என்கிற தற்போதைய தேசிய மக்கள் சக்தி கடைப்பிடிக்கிறதா என்பது கேள்வியாகும்.

இவ்வாறு படித்தவர்கள் மத்தியில் அடிப்படையில்லாமலும், மேம்படுத்தல் (அப்டேட் ) செய்யப்படாமலுமிருக்கின்ற விடயங்களினால்தான் பல்வேறு பிழைகள் நடந்துவிடுகின்றன. வெளிப்பூச்சுக்கு இருப்பவற்றினை மட்டுமே வைத்துக்கொண்டு படித்தவர்கள் கூட வெளிப்படுத்தும் கருத்துக்கள் சில தேவையற்ற விடயங்களைச் செய்துவிடுகின்றன.

இது வீணான விளைவுகளை சடுதியாகவும் ஏற்படுத்தி விடுகின்றது. இது போன்ற விடயங்கள் தமிழ் மக்களிடம் மாத்திரமல்ல, சிங்கள மக்களிடமும் இருக்கத்தான் செய்கின்றன. அதனால் கூட இந்த மாற்றம் என்கிற அலை அடித்திருக்கக்கூடும்.

போர்க் குற்றவாளிகளை எமது அரசாங்கம் தண்டிக்காது என்று ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டபோதே வெளிப்படையாக அறிவித்தவர் தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க. அத்துடன் விஜித ஹேரத் எமது அரசாங்கம் காணி, பொலிஸ், அதிகாரங்களை பகிராது என்றுரைத்திருந்தார்.

அவ்வாறிருக்கையில்தான், ஜே.வி.பி.யின் செயலாளர் டில்வின் சில்வா அரசியலமைப்பின் 13ஆவது திருத்தமும் அதிகாரப்பகிர்வும் தமிழ் மக்களுக்கு அவசியமில்லை. தங்களுடைய அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்காக தமிழ் அரசியல்வாதிகள் இதனைப் பயன்படுத்தி வருகின்றார்கள் என்ற கருத்தினை அண்மையில் வெளியிட்டிருக்கிறார். அப்படியானால், இத்தனை காலமும் நடைபெற்றுவந்த போராட்டங்கள் வெறுமனே அரசியல்வாதிகளுக்கானது என்பது டில்வினுடைய கருத்தாக இருக்கமுடியும். இக்கருத்துக்கள் ஒரு இடதுசாரித்துவத்துக்குள் இருக்கின்றவர்களின் கருத்தாக இருக்கமுடியுமா என்பது முதல் நிலையாகும்.

டில்வின் சில்வாவின் கருத்து அரசாங்கத்தின் கருத்தா? ஜே.வி.பியின் கருத்தா? அல்லது தேசிய மக்கள் சக்தியின் கருத்தா? கடந்த காலங்களில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் பதவியில் இருக்கும் போது தமிழர் பிரச்சினை தொடர்பாக அமைச்சர்கள் மூலம், தமது கருத்தை வெளிப்படுத்துவார்கள்.

அது போன்றதொரு கருத்துதானா? போன்ற கேள்விகள் தமிழ் அரசியல் தரப்புகளிடமிருந்து வெளிப்பட்டு வருகின்றன. இந்தக்கேள்விகளுக்கு யார் சரியான பதிலை முன்வைப்பார்கள் என்பது வினவப்படவேண்டியது.

இலங்கையில் ஒற்றையாட்சியே தொடர வேண்டும் - பாராளுமன்றத்தின் அதிகாரங்களைப் பகிரக்கூடாது, தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தை அங்கீகரிக்க மறுத்தல், அரசியல் விவகாரங்கள் மற்றும் பொருளாதாரத்தில் வெளிநாட்டு தலையீடு வர அனுமதிக்க விடாது தடுத்தல், தமிழர்களுக்கு எதிரான போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளுக்கு சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறையை நிறுவுவதற்கான எந்தவொரு சர்வதேச நடவடிக்கையையும் எதிர்க்க வேண்டும் இவ்வாறானவைகளே தமிழர்கள் விடயத்தில் ஜே.வி.யின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

ஆயுதப் புரட்சி இயக்கமான ஜே.வி.பி. யினர் ஆயுத வழியினைத் துறந்த பின்னர் இலங்கையில் மிக மோசமான சிங்கள இனவாத கட்சியாகவே படிநிலையாக வளர்ச்சியடைந்து இருக்கிறார்கள். காலாகாலமாக தமிழர் மீதான தாக்குதல்களை தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் செய்கின்ற போது மிகத் தீவிரமாக அந்த அரசாங்கங்களுடன் இணைந்து செயற்பட்ட கட்சியாகவே இருக்கிறது.

கடந்த ஆட்சிகளில் ஏற்பட்ட ஊழல் மோசடிகளினால் மக்கள் ஒரு ஆட்சிமாற்றத்தை விரும்பியமையினால் இந்த ஆட்சி அமைந்துள்ளது. ஊழல் மோசடிகளுக்கு எதிராகச் செயற்படுவதாகவும், அதில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகவும் தேசிய மக்கள் சக்தி அறிவித்திருக்கிறது.

ஆனால் இந்த அனைத்து விடயங்களும் இன்று நேற்று நடந்த விடயங்கள் அல்ல என்பதும் காலாகாலமாக நடைபெற்று வந்தவையே அப்போதெல்லாம் இவர்கள் அந்த அரசியல்வாதிகளுக்கு ஆதரவாகவே இருந்தார்கள் என்பதும் மறக்கப்படாதவைதான்.

இந்த நாட்டில் வாழும் தேசிய இனங்கள் அனைவரும் சுயநிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும் என்ற நல்லெண்ண அடிப்படையில் முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் அவை இனவெறிச் சிந்தனையின்றி நடைபெற்றால் நல்லதே. ஆனால், ஜே.வி.பி.யின் நோக்கம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று விட்டோம். வர இருக்கின்ற பாராளுமன்றத் தேர்தலிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று சட்ட ஒழுங்குகளை அமைத்து பாராளுமன்றத்தினுடாக அமுல்படுத்திவிடலாம். அனுரவோடு நாடு என்பதனை நிரூபித்துவிடலாம் என்ற கர்வ சிந்தனையும் நல்லதல்ல.

ஆனால் ஏனைய கட்சிகளின் வெற்றிவாய்ப்புகள் இதனைத் தடுக்காமலிருந்தால் சரி. நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின் போது அனுரகுமார திசாநாயக்க தமிழ் மக்களது வாக்குகளும் தனக்கு வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

அந்தக் கருத்து தமிழ்த் தரப்பிடம் எதிர்ப்பலைகளையும் உருவாக்கியிருந்தது. அதனைவிடவும் போர்க்குற்றவாளிகளை தண்டிக்கமாட்டேன் என்ற கருத்து சிங்கள மக்கள் மத்தியில் பெரும் அலையான ஆதரவு அரசியலைச் செய்திருந்தது.

மறுதலையாக இதனை தமிழ் மக்கள் சரியாக கணக்கிலெடுக்கவேயில்லை. ஜனாதிபதி தெரிவு முடிந்தபின்னர் பலரும் இத் தேர்தல் இனவாதம் பிரயோகிக்கப்படாது நடந்து முடிந்திருக்கிறது என்று கூறினார்கள். ஆனால் வெளிப்படையாக அல்லாமல் நாசூக்காக பிரயோகிக்கப்பட்ட இனவாதம் சிறப்பாக செயற்பட்டிருந்தது என்பதற்கு இந்தப் போர்க் குற்றவாளிகள் போதுமானது.

அதே போன்று வடக்கு கிழக்கை அடிப்படையாகக் கொண்ட 13ஆவது திருத்தம், அதிகாரப் பரவலாக்கம் போன்ற விடயங்கள் சிங்கள மக்கள் மத்தியில் இப்போதும் அச்சத்துடனேயே பார்க்கப்படுகின்ற நிலை காணப்படுகிறது என்பதனை மிகச் சரியாக கணித்துவைத்திருக்கின்ற ஜே.வி.பி. அதன் செலாளரான டில்வின் சில்வா மூலம் 13ஆது திருத்தம் தொடர்பான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறது. இது கவனிக்கப்படவேண்டியது. இக்கருத்து இம்முறை பாராளுமன்றத் தேர்தலிலும் பெருவாரி வாக்குகளை குவிக்கலாம்.

பெருமளவு ஆசனங்களையும் கொண்டுவரலாம். அதே நேரத்தில் மாற்றம் என்ற கண்துடைப்பு விடயத்தினை மாத்திரம் வைத்துக்கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாட்டை தம்முடைய வேட்பாளர்கள் மூலம் வடக்கு கிழக்கில் தேசிய மக்கள் சக்தி செய்துவருகிறது.

இதற்கு தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் மீதுள்ள விரக்தியை மூலதனமாக தேசிய மக்கள் சக்தி என்கிற ஜே.வி.பி பயன்படுத்துகிறது. ஆனால், இந்த ஏமாற்று வேலைகளை நம்பி மக்களும் அவர்கள் பின் செல்வதற்குத் தயாராகி வருகின்றார்கள்.

இது ஒரு ஆபத்தான நிலைமையே. இந்த நிலையை உணர்ந்து கொண்டு தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இதற்கான மாற்று வழிகளை முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் உருவாகியிருக்கிறது. இலங்கை நாடு சிங்கள மக்களுக்குரிய நாடு, இது தனி பௌத்த சிங்கள நாடு. இதில் நாங்கள் சொல்வதே சட்டம்.

இதனை யாரும் எதிர்த்து நிற்க முடியாது என்ற நிலையை உருவாக்கும் நீண்ட கால செயற்திட்டத்தைக் கொண்டே நகர்த்தப்பட்டுவரும் பெரும்பான்மையினரின் ஆட்சிகளில் இதுவரை நடைபெறாத சில விடயங்கள் அனுரகுமாரவின் ஆட்சியில் நடைபெறும் என்ற நம்பிக்கை காணப்படுகிறது.

இருந்தாலும், கடந்த கால சிங்கள ஆட்சியாளர்களின் வரலாறுகள் தமிழர்கள் அறிந்தவை என்பதனால் சந்தேகங்களும் இருக்கத்தான் செய்கின்றன. அந்தவகையில்தான், இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் ஒரு மூலோபாய கூட்டணியை உருவாக்கி, எதிர்கால ஜனநாயக செயல்முறையை ஒற்றுமையாக எதிர்கொள்ளவேண்டும் என்கிற முன்வைப்புகள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

சுய நிர்ணய அடிப்படையில் உருவான கட்சியின் ஜனாதிபதியிடம் பிரயோசனமடையும் என்பது இடதுசாரித்துவத்தின் முழுமை மற்றும் நேர்மையில் தங்கியிருக்கிறது. அது அரசியல் தீர்வையும் தமிழ் மக்களின் உள்ளார்ந்த சுயநிர்ணய உரிமையையும் ஒப்புக்கொள்வதாகவும் இருக்கும் என்று நம்புவோம்.



# வாழ்வியல் தரிசனம்

நினைவு அடுக்குகளில் பதிவுகள் பெருகிய வண்ணம் இருக்கின்றனவே தவிர, அவை நிகழ்ந்த பதிவுகளை அழிக்க முடியாமல் திணறுகின்றன. இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிஸிக்கும். இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிஸிக்கும். இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிஸிக்கும்.

இளமைக்கால சேட்டைகள், குறும்புகள், பாசக்கார நண்பர்களுடன் ஊர் சுற்றுவது, அந்தக் காலத்தல்ஈ பாடசாலைக்கு வராமல் ஒளிந்து கொண்டிருக்கும் மாணவர்களை, எங்கள் தலைமை ஆசிரியரான ஆறுமுகம் வாத்தியார், அவர்களின் வீடுகளுக்கு கையில் பிரம்புடன் சென்று, பெற்றோரின் முன்னிலையிலேயே பிரம்பால் அடித்து, பாடசாலைக்கு அழைத்துக் கொண்டு செல்வார்.

இப்போது நினைத்தாலும் அந்ப் பசுமைமிகு எண்ணங்களில் இருந்து மீளமுடியாதுள்ளது. இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிஸிக்கும்.

கோவில் திருவிழாக்கல், நாடகங்கள், கூத்துகள். கோவில் திருவிழாக்கல், எங்கள் தலைமை ஆசிரியரான ஆறுமுகம் வாத்தியார், அவர்களின் வீடுகளுக்கு கையில் பிரம்புடன் சென்று, பெற்றோரின் முன்னிலையிலேயே பிரம்பால் அடித்து, பாடசாலைக்கு அழைத்துக் கொண்டு செல்வார்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

# வீதியைப் புனரமையுங்கள்

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொத்தான்தீவு கிராமத்தில் இருந்து கட்டைக்காடு ஊடாக சின்னப்பாடு வரை செல்லும் 5 கிலோ மீற்றர் வீதியைப் புனரமைத்தை தருமாறு கோரி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

‘கட்டைக்காடு வீதி மோசடியுடன் சம்பந்தப்பட்ட விஷமிகளை கைது செய்ய வேண்டும்’, ‘வீதி புனரமைப்பு தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும்’, ‘அரசு எம்முடன், நாமும் அரசுடன்தான்’, ‘எமது பகுதியை ஊழல்வாதிகளிடமிருந்து பாதுகாத்திடுங்கள்’ என்று இதுபோன்ற பல வாசகங்கள் எழுதப்பட்ட பல்வேறு பதாதைகளை ஏந்தியவாறும் மக்கள் எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றனர்.

இந்த வீதியை கார்ப்பட் வீதியாக புனரமைப்பு செய்வதற்காக அரசாங்கத்தினால் abc கற்கள் போட்டப்பட்டு ஒரு வருடமாகியும் இது வரை புனரமைப்பு செய்யப்படாமையினால் இந்த வீதியை பயன்படுத்தும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆர்.ரஸ்மின்

# அநுர அரசாங்கம் கடன் மேல் கடன் பெறுகிறதா?



ச.சேகர்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பதவியேற்று ஒரு மாதங்கள் நெருங்கியுள்ள நிலையில், அவர் பொறுப்பேற்று முதல் மூன்று வாரங்களினுள் 465.1 பில்லியன் ரூபாய் திறைசேரி உண்டியல்கள் வழங்கல்களினூடாக திரட்டப்பட்டுள்ளமை தொடர்பில் பல்வேறு தரப்பினரால், மாறுபட்ட கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

இந்த செயற்பாடு தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டு வரும் ஒரு நடவடிக்கையாக அமைந்துள்ளது. அதாவது, புதிய ஜனாதிபதி மற்றும் அவர் சார்ந்த கட்சியின் அங்கத்தவர்களைக் கொண்ட அமைச்சரவை நியமிக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்ற அசாதாரண செயலாக குறிப்பிட்டுவிட முடியாது.

சாதாரணமாக அரசாங்கத்தின் நாளாந்த செலவுகளை ஈடு செய்வதற்கும், ஏற்கனவே வழங்கப்பட்டு முதிர்வடையும் திறைசேரி உண்டியல்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் இலங்கை மத்திய வங்கியினால் திறைசேரி உண்டியல்கள் வாராந்தம் வெளியிடப்பட்டு நிதி திரட்டப்படுவது வழமை. இந்நிலையில் புதிய அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் கடன் பெற்ற வண்ணமுள்ளது என எதிர் தரப்பைச் சேர்ந்த ஒரு சாராரும், தமது கொள்கையை இந்த அரசாங்கம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கின்றது என இன்னொரு சாராரும் தமக்கு சாதகமான வகையில் கருத்துகளை வெளி மேடைகளில் வெளியிடுவதை அவதானிக்க முடிந்தது.

உண்மையில், இந்த திறைசேரி உண்டியல் வழங்கும் முறைமை வழமையாக எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்த போதிலும் இலங்கை மத்திய வங்கியினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடாக அமைந்துள்ளது. உண்மையில், இந்த செயற்பாட்டுக்கும் அரசாங்கத்துக்கும் நேரடித் தொடர்புகள் இருப்பதாக கருதிவிடவும் முடியாது. இலங்கை மத்திய வங்கியினாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், இலங்கை மத்திய வங்கி சுயாதீன அமைப்பாக இயங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தின் அன்றாட செலவுகளை ஈடு செய்வதற்கு அவசியமான நிதியை திரட்டி வழங்கும் பொறுப்பு இலங்கை மத்திய வங்கிவசம் காணப்படுகின்றது. இந்நிலையில், அந்த நிதியை இரு வழிகளில் இலங்கை மத்திய வங்கியினால் நிறைவேற்ற முடியும். மேலே தெரிவிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் வழங்கி நிதி திரட்டுவது அதில் ஒன்று. மற்றையது, பணம் அச்சிட்டு புழக்கத்தில்விடுவது.

2020 - 2022 காலப்பகுதியில், இரண்டாவது முறைமை அக்காலகட்டத்தில் மத்திய வங்கியின் ஆளுநர்களாக இருந்த அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் டபிள்யு. டி. லக்ஷ்மன் ஆகியோரால் கட்டுக்கோப்பற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டமையால் நாடு பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டதை அனைவரும் அறிந்ததே.

மேலும், தற்போது அமலிலுள்ள சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையின் பிரகாரம் நாணயத் தாள் அச்சிடுவது என்பது பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், அரசாங்கத்துக்கு அவசியமான நிதித் தேவையை பூர்த்தி செய்ய திறைசேரி உண்டியல்கள் வழங்க வேண்டிய நிலை இலங்கை மத்திய வங்கிக்கு காணப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் சார்பில் ஜனாதிபதியின் பொருளாதார மற்றும் நிதிசார் விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் பேராசிரியர். அனில் ஜயந்த குறிப்பிடுகையில், அமைச்சின் செலவுகள் மற்றும் முதிர்ச்சியடையும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் கடன் பத்திரங்களுக்கான செலவை ஈடு செய்வதற்காக உள்ளக நிதிச் சந்தையிலிருந்து நிதியைத் திரட்டிக் கொள்வதற்காக திறைசேரி உண்டியல்கள் மற்றும் கடன் பத்திரங்களை வழங்குவது என்பது அசாதாரண செயற்பாடு அல்ல. இது வழமையாக பின்பற்றப்படும் சாதாரண செயற்பாடாகும். இதனை இலங்கை மத்திய வங்கி மேற்கொள்கின்றது.

முன்னர் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் முதிர்வடையும் தினத்தில் அதற்கான கொடுப்பனவை இலங்கை மத்திய வங்கி மேற்கொள்ளும். இது வழமையான நடவடிக்கையாகும். புதிய ஜனாதிபதி

நியமிக்கப்பட்டுள்ளதால் இது புதிதாக முன்னெடுக்கப்படும் விடயமல்ல. இதில் எந்தவிதமான விசேடத்தன்மையும் இல்லை.

சர்வதேச சந்தையிலிருந்தும் அரசாங்கம் கடன்களை பெற்றுக் கொள்வது இந்த குறுகிய காலப்பகுதியில் அதிகரித்துள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவை முற்றிலும் தவறானவையாகும். புதிதாக எவ்வித சர்வதேச கடன் பெறலும் மேற்கொள்ளப்படவில்லை. உள்ளக மற்றும் சர்வதேச நிதிச் சந்தைகளிலிருந்து அரசாங்கம் கடன் பெற்றுள்ளது என்பதாக வெளிவரும் அறிக்கைகள் பற்றி விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.



டக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
ommunications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැ
இலங்கை மத்திய
CENTRAL BANK OF SRI

ளியிடுபவர் பொதுப்படுகடன் திணைக்களம்
திகதி 2024 ஒத்தோபர் 18

**2024 ஒத்தோபர் 15 அன்று இடம்பெற்ற திறைசேரி உண்டியல் வழங்கல்**

24 ஒத்தோபர் 15 அன்று இடம்பெற்ற திறைசேரி உண்டியல் ஏலத்திற்கு மேலதிகமாக, ரூ.9,700 மி
ண்ட மொத்த சந்தைக் கோரல் தொகையில் LKA09125A178, LKA18225D187 மற்றும் LKA364
கிய பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கங்களைக் கொண்ட திறைசேரி உண்டியல்களி
டம் II இல் வழங்கப்பட்ட உயர்ந்தபட்ச மொத்தத் தொகையாகவிருக்கும் ரூ.52,653 மில்லியன் ஏ
ணயிக்கப்பட்ட முறையே 9.32 சதவீதம், 9.65 சதவீதம் மற்றும் 9.95 சதவீதம் கொண்ட நிறையேற்
சரி விளைவு வீதங்களில் திரட்டப்பட்டது.

நிதிச் சந்தைகளை உறுதிப்படுத்தும் பொறுப்பை இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது. இதனை மேற்கொள்வதற்காக அண்மையில் அமெரிக்க டொலர்களை கொள்வனவு செய்திருந்தது. இந்த நடவடிக்கை ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தது என தெளிவுபடுத்தியிருந்தார்.

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 465.1 பில்லியன் ரூபாய் திறைசேரி உண்டியல் வழங்கல்களினூடாக திரட்டப்பட்ட தொகையில், 400 பில்லியன் ரூபாய் ஏற்கனவே பெற்றுக் கொண்ட கடன்களை மீளச் செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், எதிர்தரப்பைச் சேர்ந்தவர்கள் இந்த விடயம் தொடர்பில் குறிப்பிடுகையில், கடந்த அரசாங்கத்தினால் கடன் பெறுவதற்காக உச்ச வரம்புத் தொகை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த வரம்பை பின்பற்றி இந்த புதிய அரசாங்கம் இயங்குகின்றது. மாறாக, கடந்த அரசாங்கத்தின் கொள்கையை இந்த அரசாங்கமும் பின்பற்றுகின்றது. இது வரவேற்கத்தக்கது என்றவாறாக கடந்த அரசாங்கத்தில் பொறுப்பு வகித்தவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

எதிர் தரப்பைச் சேர்ந்த மற்றுமொரு அமைப்பினர் தெரிவிக்கையில், அரசாங்கம் மணித்தியாலத்துக்கு 1.34 பில்லியனை கடனாக பெறுகின்றது. இவ்வாறு அசாதாரணமான முறையில் பெறப்படும் நிதி எதற்கு பயன்படுத்தப்படுகின்றது என்பது தொடர்பான விளக்கத்தை அரசாங்கம் வழங்க வேண்டும். பொறுப்பேற்று முதல் 13 தினங்களுக்குள் 419 பில்லியன் ரூபாய் கடனாக பெறப்பட்டுள்ளது.

இதனால் நாட்டுக்கு பயனில்லை. நாடு மீண்டும் ஒரு நெருக்கடியை நோக்கி பயணிக்கின்றது. இரு மாதங்களாக ஓய்வூதியம் பெறுவோருக்கு நிலுவையிலுள்ள 3000 கொடுப்பனவை மேற்கொள்ளக்கூட அரசாங்கத்தினால் முடியவில்லை. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி இவ்வாறு கடன் பெற வேண்டிய தேவையில்லை. நாம் ஆட்சிக்கு வந்தால், இவ்வாறான கடன் பெறல்களை மேற்கொள்ளமாட்டோம் என்று, ஆனால் அவர்களும் அதனையே மேற்கொள்கின்றனர் என்பதாக அமைந்திருந்தது.

இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் வகையில், தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த கண்டி மாவட்ட வேட்பாளரான லால் காந்த கருத்துத் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார காலப்பகுதியில் தமது கட்சியைச் சேர்ந்த எந்தவொரு தலைவரும், நாம் கடன் பெறமாட்டோம் என ஒரு போதும் தெரிவிக்கவில்லை. கடன் பெறுவது என்பது குற்றமல்ல. எமக்கு கடன்கள் அவசியம். பெற்றுக் கொள்ளும் கடன்களை வினைத்திறனான வகையில், உகந்த முதலீடுகளில் பயன்படுத்துவது முக்கியமானது. மாறாக அவற்றை கொள்ளையிடுவது தவறானது என தெரிவித்திருந்தார்.

எது எவ்வாறாயினும், இந்த திறைசேரி உண்டியல் வழங்கி நிதிச் சந்தைகளிலிருந்து நிதி திரட்டுவது என்பது இலங்கை வரலாற்றில் புதிய விடயம் அல்ல. இதற்கு முன்னரும் அவ்வாறு நடந்துள்ளது. இது வழமை என்பதே உண்மை.

தேர்தல் நெருங்கி வரும் காலப்பகுதியில், தற்போது பதவி ஏற்று ஒரு மாதத்தைக்கூட பூர்த்தி செய்யாமல், மூன்று அமைச்சர்களை மாத்திரம் கொண்டு இயங்கும் அரசாங்கத்தை விமர்சிக்கும் வகையில் இவ்வாறான கருத்துகள் பொது வெளிகளில் முன்வைக்கப்பட்டு மக்களை திசை திருப்பும் முயற்சிகளை சில சக்திகள் மேற்கொண்ட வண்ணமுள்ளன.





# இறப்பர் தோட்டங்களும் இன்றைய நிலையும்



பெரியசாமி சுசாந்தனி,
யாழ் பல்கலைக்கழகம்,
ஊடககற்கைகள் துறை

இலங்கை என்ற வர்த்தக பொன்நாட்டின் மலையகம் என்றவுடன் தேயிலைத் தொழிலை பேசும் நம்மவர் இறப்பர் மரங்கள் படும் இரணங்களை அங்குள்ள தோட்டத் தொழிலாளர்கள்படும் அவல நிலை தொடர்பிலும் பேசப்படுவதில்லை. இறப்பர் மரங்களுக்கு இரணங்கள் புதிதல்ல என்பது போல இறப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழிகள் புதிதல்ல என்று கூறவேண்டும். இரணங்களைக் கண்டு அஞ்சுவதில்லை நம்மவர்: இருப்பினும் எம்மவரின் நிலையை வெளிப்படுத்த வேண்டியது எழுத்தாணி பிடித்த எங்களின் கடமையல்லவா.

உலக வாழ் மக்களை பொறுத்தவரையில் மலையகப் பெருந்தோட்டம் என்பது வெறுமனே தேயிலை மாத்திரமே என்று பலரும் நினைத்துள்ளனர். அவ்வாறிருக்க மலையகப் பெருந்தோட்டம் என்பது இறப்பர் தோட்டங்களையும் ஒன்றிணைத்தது என்றே கூற வேண்டும்.

பிரதானமாக சப்ரகமுவ மாகாணத்தினுடைய இரத்தினபுரி மற்றும் கேகாலை போன்ற மாவட்டங்களில் இறப்பர் பெருந்தோட்டத்தை பிரதான தொழில்துறையாக இங்குள்ள தோட்ட மக்கள் கொண்டு செயல்படுகின்றனர். தற்கால பொருளாதார வளர்ச்சியில் தொழில்துறைகளிலும் மக்களிடையேயும் பிளாஸ்டிக், இறப்பர் போன்றவற்றின் கேள்விகள் அதிகரிக்க இவ்வாறான தோட்டத் தொழிலாளர்களாய் பணி புரியும் நம்மவரின் நிலை செத்து முடிவதாகவே போகின்றது.

இலங்கையில் பிரித்ததானியரால் 19ம் நூற்றாண்டில் அறிமுகம் செய்யப்பட்ட இறப்பர் பெருந்தோட்ட பயிர்ச்செய்கை தேயிலை பயிர்செய்கைக்கு இணையான வருவாயை ஈட்டித்தரும் பிரதான பயிர்ச்செய்கையாக முன்னேற்றம் கண்டுள்ளது.

இலங்கையின் முக்கிய ஏற்றுமதி மற்றும் பெருந்தோட்ட செய்கையான இறப்பர் இரத்தினபுரி மாவட்டத்தில் மொத்த நிலப்பரப்பில் சுமார் 25 வீதத்திற்கு மேற்பட்ட பகுதியில் பயிர்செய்யப்பட்டுள்ளது.

இறப்பர் தோட்டங்களை பொறுத்தவரையில் இறப்பர் கன்றுகளை நட்டியது முதல் ஐந்து வருடங்கள் அதை பராமரித்து வளர்க்கப்படும் அதன் பின்னரான காலத்திலேயே அம்மரங்கள் பாவனைக்கு உட்படுத்தப்படும். இதன் பிறகு மரங்கள் நேர்த்தியான பாவனையின் அடிப்படையில் அவை தோட்டத்து தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஒரு நபருக்கு 350 தொடக்கம் 450 மரங்கள் வரை வழங்கப்படும்.

இம்மரங்கள் தொடர்ச்சியாக சீவப்படும் சந்தர்ப்பங்களில் அவை தரமிழக்கப்பட்டு பாவனைக்கு வழங்கும் வீதம் குறைவடையும். இறப்பர் மரங்களைப் ஒவ்வொரு நாள் கடந்து அது வெட்டப்படும்.

ஒரு நபர் சராசரியாக ஒரு நாள் ஒன்றுக்கு 45 தொடக்கம் 50லிட்டர் இறப்பர் பாலினை பெறுகின்றனர். அதேபோல் 3 தொடக்கம் 5 கிலோ கிராம் வரையாக உலர்ந்த இறப்பர் பெறப்படுகின்றது.

இறப்பர் தோட்டங்களை பொறுத்தவரையில் ஆரம்பக்காலங்களில் அரசாங்க நிறுவனங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தமையினால் முறையான பராமரிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

ஆனால் தற்போது இறப்பர் தோட்டங்கள் தனியார் வசம் சென்றதனால் அவை முறையான பராமரிப்புக்கள் இன்றி அதிகரித்த உற பாவனைகள், இறப்பர் மரங்களை சீவுவதற்கான காலம் வருவதற்கு முதலே அவற்றை சீவுதல் என சீரற்ற பாவனை முறைகளை மேற்கொண்டு இலாப நோக்கினை மட்டும் கருத்திற்கொண்டு செயற்படுகின்ற தன்மையே காணப்படுகின்றது.

அத்தோடு ஒரு தோட்டத்தில் அளவுக்கு மீறிய அளவில் இறப்பர் பாலினை பெறுதல் என முறையற்ற செயற்பாடுகள் தனியார் உரிமையாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்றதை காணக்கூடியதாக உள்ளது.

இறப்பர் பெருந்தோட்டத்தை பொறுத்தவரையில் மழைக்காலங்களில் அவை வெட்டப்படுவதில்லை. ஆனால் தற்காலத்தில் தனியார் வசம் இருக்கும் காரணத்தினால் மரங்களுக்கு பொலித்தீன் உறைகள் அடைக்கப்பட்டு மரங்கள் மழைக்காலங்களிலும் வெட்டப்படுகின்ற நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு மழைக்காலங்களில் வெட்டப்படுவதினால் மரங்கள் அதன் தரத்தினை வெகு விரைவில் இழக்க கூடிய நிலைப்பாடு ஏற்படுகின்றது என்றும் இறப்பர் தோட்ட தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இறப்பர் செய்கை பரவலாக பயிர்ச்செய்யப்படுகின்ற இரத்தினபுரி, கேகாலை போன்ற மாவட்டங்களினை பொருத்தவரையில் இறப்பர் செய்கை வீழ்ச்சியடைந்து வருகின்ற நிலைப்பாட்டினை அண்மைக்காலங்களில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இப்பிரதேசங்களில் இப் பெருந்தோட்டம் தற்காலத்தில் அழிக்கப்பட்டு வருகின்ற செயற்பாடு கனிசமாக காணப்படுகின்றது. அவ்வாறு இறப்பர் மரங்கள் அழிக்கப்பட்டு "செம்பணை" எனப்படுகின்ற சிங்களமொழியில் "கட்டுபொல்" என்ற ஒரு வகையான செடி பரவலாக நாட்டப்பட்டு வருகின்றது.



இந்தச் செடியானது பிரதேசத்தின் நீர் வளத்தை பாதிக்கக் கூடியதாகவும் காணப்படுகின்றது. செம்பணை என்ற தென்னை மாதிரியான இச்செடியானது எண்ணெய் உற்பத்திக்காக வளர்க்கப்படுகின்றது.

இத்தாவரமானது, சுற்றுச்சூழல் மாசடைவுக்கு பிரதான காரணமாகவும் நீர் வளத்தினை உறிஞ்சி அப்பிரதேசங்களின் நீர்பற்றாக்குறைக்கும் அதிகரித்த வெப்பநிலையான காலநிலைக்கும் காரணமாக இருக்கின்றது.

அதேவேளை இறப்பர் தோட்ட தொழிலாளர்கள் ஒருநாள் சம்பளத்தினை முழுவதுமாக பெற்றுக்கொள்ள வேண்டுமானால் பல மீற்றர் தூரங்கள் அந்த இறப்பர் பாலினை சுமந்து கொண்டு செல்ல வேண்டும். 45 தொடக்கம் 50 லிட்டர் இறப்பர் பாலினையும் 4 தொடக்கம் 5 கிலோ வரையான உலர்ந்த இறப்பரினையும் எடுத்து தலையில் தாங்கி செல்ல வேண்டும்.

இவ்வாறான ஒரு பரிதாபமான நிலையை இம்மக்கள் கடந்து செல்கின்றனர். அதேநேரம் மழைக்காலங்களில் தொழிலாளர்கள் வேளைக்கு சென்று இறப்பர் பாலினைப்பெறும் போது அவற்றில் மழைநீர் படுவதனால் அவை உடனடியாக உறைநிலைக்கு சென்றுவிடும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் உறைந்த பால் நிர்வாகத்தால் பெற்றுக்கொள்ளப்படும் ஆனால் அன்றைய தினம் வேளைக்கு சென்ற குறித்த தொழிலாளர்களுக்கு அன்றைய நாளுக்கான பெயர் வழங்கப்படாது.

இவ்வாறானதொரு பரிதாபமான நிலையிலேயே இறப்பர் தோட்டத்தொழிலாளர்கள் தங்களுடைய நாளாந்த ஜீவனோபாயத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இன்றளவில் அருகி வரும் இறப்பர் தோட்டங்களினால் அப்பகுதி மக்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதோடு ஏழ்மையான நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

# ஆரகன்

இம் மாதம் 25ம் திகதி இலங்கையில் உள்ள திரையரங்குகளில் வெளிவரவிருக்கும், 'ஆரகன்' திரைப்படத்தின் தயாரிப்பாளரான வரகுணன் பஞ்சலிங்கம் என்பவர், தயாரிப்பாளர் மட்டுமன்றி, சினிமாத் துறையிலே ஒரு நடிகராகவும் இயக்குனராகவும் உள்ளார். அவரது அனுபவங்களை, கேள்வி பதிலாக எமது வாசகர்களுக்கு பகிர்ந்துகொள்கின்றோம்.

**கேள்வி: உங்களை பற்றியும் உங்களது தயாரிப்பு நிறுவனம் பற்றியும் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

என்னுடைய பெயர் வரகுணன் பஞ்சலிங்கம். நான் தற்போது பிரித்தானியாவில் வசித்து வருகிறேன். மிக நீண்ட காலம் இலங்கையிலே ஊடகத்துறையில் பணிபுரிந்து பின்னர் புலம் பெயர்ந்து பிரித்தானியாவுக்கு வருகைதந்து நாடகத்துறை சார்ந்த பல்வேறுபட்ட விடயங்களையும் சினிமாத்துறை சார்ந்த பல்வேறு பட்ட விடயங்களையும் நான் இங்கே மேற்கொண்டு வருகிறேன். குறிப்பாக சினிமாத் துறையிலே ஒரு நடிகராகவும் இயக்குனராகவும் தயாரிப்பாளராகவும் பல துறையிலே நான் என்னுடைய பணியினை மேற்கொண்டு வருகிறேன்.

எங்களுடைய இந்த தயாரிப்பு நிறுவனம் *Trending Arts Productions* என்ற பெயரிலே 2021 ஆம் ஆண்டு நாங்கள் மூன்று சகோரதர்கள் இணைந்து உருவாக்கிய ஒரு தயாரிப்பு நிறுவனம். என்னுடைய இளைய சகோதரர்கள் இருவர். ஒருவர் நோர்வையிலே வசித்து வருகின்ற ஹரிகரன் பஞ்சலிங்கம் மற்றும் இலங்கையிலே வசித்து வருகின்ற மதுரதன் பஞ்சலிங்கம் ஆகியோர் இணைந்து இந்த தயாரிப்பு நிறுவனத்தை 2021 ஆம் ஆண்டு ஆரம்பித்தோம்.

இந்த தயாரிப்பு நிறுவனம் உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் எமக்கு ஏன் வந்தது என்று சொன்னால் எங்களுடைய குடும்ப வழியாக வந்தது. எங்களுடைய தந்தையார் அமரர் தம்பிப் பிள்ளை பஞ்சலிங்கம் அவர்கள் ஈழத்திலே மிகச் சிறந்த ஒரு நாடகக்கலைஞர். அவர் அடிப்படையில் தான் எங்களுக்கும் இந்தகலை ஆர்வம் வந்தது. அவருடைய பிள்ளைகள் நாங்கள் அந்தகலை ஆர்வத்தோடு தொடர்புபட்ட இந்த நிறுவனத்தை நிறுவிகலைப் படைப்புக்களை இதனூடாக தயாரித்து வருகிறோம்.






**கேள்வி: இதுவரை நீங்கள் எவ்வாறான படைப்புக்களை உருவாக்கியுள்ளீர்கள்? சமூகத்தில் அங்கீகாரம் எத்தகையது?**

எங்களுடைய தயாரிப்பு நிறுவனம் ஊடாக தயாரிக்கப்பட்ட படைப்புக்களை பொறுத்தமட்டில் 2021 ஆம் ஆண்டு எங்களுடைய முதல் தயாரிப்பாக இருந்தது *Paradise Island* என்ற பெயரிலே உருவான தமிழ் குறுந்திரைப்படம். இந்த குறுந்திரைப்படம் சமூகவலைத் தளங்களிலே வெளியாகி பல்வேறு ரசிகர்களின் வரவேற்பை பெற்ற திரைப்படமாக அமைந்தது.

பின்னர் 2022 ஆம் ஆண்டு *In the Closet* என்ற ஒரு ஆங்கில குறுந்திரைப்படத்தை நாங்கள் தயாரித்திருந்தோம். அது பிரித்தானியாவில் தயாரிக்கப்பட்டது. எனது இயக்கத்திலும் எனது நடிப்பிலும் உருவாக்கப்பட்டஒரு குறுந் திரைப்படமாகும். அந்த குறுந்திரைப் படம் சர்வதேச திரைப்பட விருதுக்காக அனுப்பப்பட்டு பல்வேறு சர்வதேச விருதுகளை அந்த குறுந்திரைப்படம் தட்டிச்சென்றது. குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் சர்வதேச விருதுகளை தட்டிச்சென்றது. வெகு விரைவில் குறுந் திரைப்படத்தை நீங்கள் கண்டு மகிழ முடியும்.

**கேள்வி: நீங்கள் தயாரிக்கின்ற ஆரகன் திரைப்படம் பற்றி குறிப்பிட முடியுமா?**

ஆரகன் என்ற முழு நீள திரைப்படம் எங்களால் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதலாவது முழு நீள திரைப்படம். 2022ம் ஆண்டு படப்பிடிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்து 2024 ஒக்டோபர் 04ம் திகதி இந்தியாவிலே திரையரங்குகளில் வெளியாகி பல ரசிகர்களின் வரவேற்பை பெற்ற ஒரு *Fantasy thriller movie* ஆக ஆரகன் திரைப்படம் அமைந்திருக்கிறது.

**கேள்வி: இந்த திரைப்படம் இலங்கை திரையரங்குகளில் எப்போது வெளியாகும்?**

இலங்கையிலே வருகின்ற 25ம் திகதி திரையரங்குகளில் ஆரகன் திரைப்படம் வெளியிட காத்திருக்கின்றோம் ஏற்கனவே இந்திய திரையரங்குகளில் ஒக்டோபர் மாதம் 4ம் திகதி வெளியாகி ரசிகர்களிடம் பெரும் வரவேற்பை பெற்ற ஒரு திரைப்படமாக அமைந்தது. சமூக வலைத்தளங்களிலே நீங்கள் பார்த்தால் தெரியும்.

**கேள்வி: இத்திரைப்படத்தில் நடித்த நடிகர்களை பற்றி குறிப்பிட முடியுமா?**

இந்த படத்தில் நடித்த நடிகர்களை பொறுத்த வரையிலே பிரதான நடிகராக மைக்கல் தங்கதுரை அவர்கள் நடித்திருப்பார். அவர் ஏற்கனவே இந்தியாவில் சில திரைப்படங்களில் நடித்து பிரபல்யமானவர்.

கதாநாயகி இலங்கையை சேர்ந்த கவிப்பிரியா இலங்கை ஊடகத்துறையில் பிரசித்திபெற்று விளங்கிய ஒருவர். கவிப்பிரியா இந்த ஆரகன் திரைப்படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகியது எங்களுக்கும் ஒரு பெருமை. ஏனென்றால் நாங்களும் இலங்கையை சேர்ந்த தயாரிப்பாளர்கள் கவிப்பிரியாவின் அறிமுகம் எங்களுக்கும் பெருமையை தேடி தந்திருக்கிறது.

மேலும் ஸ்ரீறஞ்சினி, கலாராணி போன்ற பிரபல்யமான நடிகைகளும் இதில் நடித்திருக்கிறார்கள்.

**கேள்வி: இலங்கையை விட்டு இந்தியாவுக்கு சென்று தயாரிப்பை மேற்கொண்டதன் நோக்கம் என்ன?**

இது எங்களிடம் பலரும் வினவுகின்றவினா. இது இந்தியாவில் நாங்கள் செய்கின்ற முதல் தயாரிப்பு. சினிமா சார்ந்த கலை சார்ந்த சில அனுபவங்களை நாம் இந்தியாவில் பெற வேண்டி இருந்தமையினால் அங்கே சென்று தயாரிப்பை மேற்கொள்ள வேண்டி வந்தது. இருந்த போதிலும் நாம் இலங்கையையும் இலங்கை கலைஞர்களையும் மறந்து விடவில்லை. அவர்களுக்கான சரியான களத்தினையும் வாய்ப்பினையும் நாம் அடுத்துவரும் படைப்புக்களில் நிச்சயமாக வழங்குவோம். எம் கலைஞர்களை தட்டிக்கொடுத்து ஊக்கமளிக வேண்டிய கடமை எமக்கும் இருக்கின்றது என்பதை நாம் மறந்து விடவில்லை

**கேள்வி: இலங்கை ரசிகர்களிடம் ஏதாவது கூற விரும்புகிறீர்களா?**

நிச்சயமா இம் மாதம் 25ம் திகதி இலங்கை திரையில் இத்திரைப்படம் வெளி வர இருக்கின்றது எனவே திரையரங்குகளுக்கு சென்று இத்திரைப் படத்தை நீங்கள் கண்டு மகிழ வேண்டும் என்று உங்களை வேண்டுகின்றோம்.

# நா.முத்துக்குமாரின் வேடிக்கை பார்ப்பவன்



ஞா .மைக்கல் பெவன்
3 ஆம் வருடம்
ஊடககற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்

"அவன் குதிகால் இட்டு உட்கார்ந்தான் சப்பனமிட்டு உட்கார்ந்தான் ஒரு காலை நீட்டி உட்கார்ந்து பார்த்தான் வயிற்றோடு முழங்காலை சேர்த்து ஒட்டி உட்கார்ந்து பார்த்தான். இப்படியும் அப்படியுமாக எப்படி உட்கார்ந்தாலும் பசித்தது"

என்று சாதாரண மொழி நடையில் ஒரு உருக்கமான சம்பவத்தை கூறுவது என்பது எல்லோராலும் முடியாத காரியம் ஆனால் இவற்றை இயல்பாக சொல்லிச் செல்லும் கவிஞர் நா. முத்துக்குமார் அவர்களின் படைப்புகளில் ஒன்று தான் வேடிக்கை பார்ப்பவன் என்ற சொற்களஞ்சியம்!



2024 செப்டம்பர் மாதம் இந்த நூலானது வெளியிடப்பட்டது. இந்த நூலானது ஆசிரியர் நா. முத்துக்குமார் அவர்கள் தனது வாழ்க்கையில் சந்தித்த சில மனிதர்களையும் சில சந்தர்ப்பங்களையும் அடையாளம் காட்டி கதையாக நகர்த்தியுள்ளார். இந்த நூலை தனது மனைவிக்கு சமர்ப்பிப்பதாக "என் எல்லா கிறுக்குத்தனங்களோடும் என்னை பொறுத்துக் கொள்ளும் என் மனைவி ஜீவ லட்சுமிக்கு." என்ற வரிகளை குறிப்பிட்டுள்ளார்.

நாம் பயணிக்கும் போது அதிகமான புத்தகங்களை வாசிக்கின்றோம் ஆனால் வாசித்த பிறகும் நம்மோடு பயணிக்கும் புத்தகங்களின் எண்ணிக்கையோ குறைவுதான்! அவ்வாறு நம்முடைய வாழ்க்கையின் சில பக்கங்களை மீட்டுப் பார்ப்பதற்கு நா. முத்துக்குமாரின் 'அணிலாடும் முன்றில்' நூலைப்போல இந்த நூலும் நாம் பார்க்கத் தவறிய வாழ்க்கையின் சில கண்ணோட்டங்களை நமக்கு விளக்குகின்றது.



"ஜன்னல் கம்பிகள் வழியாக வேடிக்கை பார்க்கும் சிறுவனுக்கு வாசலில் கடந்து போகும் கோயில் யானையின் பிரம்மாண்டம் எவ்வாறு வசப்படும்" என்று ஒவ்வொரு சம்பவத்தை கூறும் முன்னும் கவிதை பாங்கில் அதற்கான ஒரு முன்னுரையை வழங்கி நம்மை அந்த சம்பவத்துக்கு தயார்படுத்தி பின்னர் கதையை இலகுவாக நகர்த்தி செல்கின்றார்.

அவ்வாறாக தான் பார்த்த சில மனிதர்கள் பற்றியும் இங்கு குறிப்பிட்டுள்ளார். தனது சிறுவயதில் தன்னை பள்ளிக்கு அழைத்து செல்லும் மாட்டு வண்டிக்காரரர் செல்கின்ற வழியில் ஒவ்வொரு நாளும் வீட்டுக்கு வந்த விருந்தாளி போல ஒவ்வொருவருடைய உணவையும் சுவைத்து பார்த்தார் எனவும் ஒரு நாள் தனக்கு பிடித்த மீன் குழம்பு அவர் அதை பொறுத்துக் கொள்ளாது நிர்வாகத்திடம் புகார் செய்ய வண்டிக்காரரர் வேலையில் இருந்து நீக்கப்பட்டார். தனது இளம் வயதில் திரையரங்கில் மீண்டும் ஒருமுறை அவரைப் பார்க்கும் பொழுது அவரிடம் செய்த தவறை கூறி மன்னிப்பு கேட்க அந்த வண்டிக்காரரர் கூறியது இவரை மன உளைச்சலுக்கு ஆளாக்கியது. ஐயா என் குடும்பத்தில் ஆறு பேர் அவ்வளவு பேருடைய வயிற்றுப் பசியும் நான் தான் தீர்க்க வேண்டும் ஆனால் எனது ஒரு வேலை பசியை தீர்த்துக் கொள்ள உங்களுடைய உணவுகளை எடுத்தது என் தப்பு தான்" என்று கூறியதோடு, இடைவேளை நேரத்தில் ஒரு பாப்கோனும் ஒரு ஐசும் வாங்கி பழைய கடன் தீர்த்து சென்றதாகவும் அவர் வாங்கிக் கொடுத்த ஐஸ் பழத்தை எடுத்து முகர்ந்து பார்க்கும் போது மீன் குழம்பு வாசனை வீசியது! என்ற அந்த கதையை முடிக்கின்றார்.

பாடசாலை நினைவுகள் இவ்வாறாக கழிந்து செல்ல கல்லூரி நாட்களில் அவர் கண்ட சில மனிதர்கள் பற்றி எடுத்துரைக்கின்றார். நா.முத்துக்குமாரின் கவிதைகளுக்கும் கைதட்டாதவர்களும் உள்ளனர் என்று கூறினால் நீங்கள் நம்புவீர்களா? அவரது கல்லூரி நாட்களில் அவர் சென்று கவிதை வாசித்து இடங்களில் எல்லாம் அவருக்கான கைத்தட்டுகள் குறைவாகவே இருந்தது. இதற்கு அவர் சொல்லும் காரணம் அந்த கவிதையை கேட்டுக் கொண்டிருந்த அனைவருமே கவிஞர்கள், பிறரின் கவிதைகளுக்கு கைதட்டினால் தனக்கான வரவேற்பு குறையும் எனக்கருதி கைத்தட்டல்களின் ஓசையின் சத்தத்தை குறைத்தவர்கள் இறுதியில் கைதட்ட மறந்தார்கள் எனவும் அதிலிருந்து நா. முத்துக்குமாரும் அவரது நண்பரும் நல்ல படைப்புகள் வரவேற்கப்பட வேண்டும். அவை பரிசு பெறுகின்றனவோ! அல்லவோ! அவற்றிற்கு முதலில் பாராட்டு வழங்க வேண்டும். என்ற கொள்கையை எடுத்துக் கொண்டதாக கூறுகின்றார்.

திரைத்துறையில் இவருடைய பயணம் சற்று வித்தியாசமானது. கவித்துறையில் மேலெழுந்து வருவதற்கு முன்னர் எல்லா இயக்குனர்களிடமும் உதவி இயக்குனராக பணி செய்வதற்கு வாய்ப்புக்கள் கேட்டு திரிந்தவர் தான் நா. முத்துக்குமார். ஒரு படப்பிடிப்பில் நடந்த சுவாரசியமான சம்பவத்தை குறிப்பிடும் போது, படத்தில் வாய்ப்பு கேட்டு வந்த தஞ்சாவூர் இளைஞன் பசியின் கொடுமையை சொல்வதைக் கேட்டு படக்குழுவினர் உண்ணுகின்ற உணவை பெற்றுத் தருவதாக கூறியும் அதனை மறுத்து உழைப்பு இல்லாமல் இலவசமாக உண்ணக்கூடாது என்று அவர் சொன்னதைக் கேட்டு அவருக்கு ஒரு சந்தர்பத்தை பெற்று கொடுக்கின்றார். பராசக்தி சிவாஜி போல நீண்ட வசனம் ஏதுமில்லை ஆனால் அந்த சின்ன வசனத்தைக் கூட அந்த நபரால் சொல்லிக் கொள்ள முடியவில்லை. அதிக தடவைகள் முயற்சி செய்து தோற்றுப் போனார். அவரிடம் முத்துக்குமார் சென்று வினாவிய போது பசியின் கொடுமையில் இருந்த எனக்கு உணவுகளின் மீது மண்ணெண்ணெய் ஊற்றுவதை பொறுத்துக் கொள்ள முடியவில்லை அதனால் எனக்கு நடிப்பும் வரவில்லை, என்று கூறினார். ஆமாம் படப்பிடிப்பின் போது படத்தின் தொடர்ச்சி தன்மையில் எந்தவித பாதிப்பும் வந்து விடக்கூடாது என்பதற்காக உணவுகள் மீது மண்ணெண்ணையை ஊற்றுவது வழக்கம் என்று மறுமொழி தெரிவித்தார். ஆனால் இவ்வாறான எந்த சமாதானத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது அந்த இடத்தில் இருந்து கண்ணீருடன் அவர் விடைபெற்றதாக குறிப்பிடுகின்றார். அதிலிருந்து "வறுமை காரணமாக குடும்பத்துடன் தற்கொலை" என்று பத்திரிக்கையில் வரும் செய்திகளில் எல்லாம் தஞ்சாவூர் இளைஞனின் சாயல் உள்ளதா? என தேடிப்பார்ப்பதாக கூறுகின்றார்.

நமக்கு இருக்கின்ற பொருட்களின் பெறுமதிகள் எல்லாம் அவை இல்லாத ஒருவனுக்குதான் தெரியும் என்ற பாடத்தை கற்றுக்கொண்டதோடு, ஒவ்வொரு படப்பிடிப்பு தளங்களிலும் இவ்வாறு நிற்கின்ற ஒவ்வொரு இளைஞனிற்கு பின்னர் ஆயிரம் கதைகள் புதைந்து உள்ளதை கண்டுக்கொண்டதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

தீராத விளையாட்டு என்ற தலைப்பின் கீழ் வருகின்ற சம்பவத்தில் தகப்பனும் மகனும் கண்ணாம்பூச்சி ஆட்டத்தில் கட்டிலின் கீழே ஒளிந்த தந்தையின் கண்களுக்கு அகப்பட்ட பழைய பொருட்கள் அவனது சிறு வயதுக்கு அவனைக் கொண்டு சென்றதும் அவனது தந்தையின் நினைவுகளை அவன் மீட்டுப் பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்ததையும் அழகான மொழிநடையில் எடுத்து கூறுவதோடு, நிகழ்ந்த ஒரு விடயம் எப்படி நிகழ்ந்திருக்கலாம் என்ற அவரது




கற்பனையும் நமது வீட்டில் ஒன்றுக்கும் உதவாமல் ஏதோ ஒரு காரணத்துக்காக நினைவுகளை கடத்தும் ஒரு பொருள் இருந்து கொண்டிருக்கின்றது என்பதை நினைவுபடுத்துகின்றது.

இந்த வேடிக்கை பார்ப்பவன் என்ற புத்தகத்தில் ஒரு வாசகனாக நான் வேடிக்கை பார்த்த "புன்னகைக்கு மருந்து கதை"என்ற கதையில் நா. முத்துக்குமார் எல்லாத்துறையிலும் சாதிக்க துடித்த ஒரு ஆளுமை. இவ்வாறு இருக்க அவர் புகைப்படத்துறையையும் விட்டு வைக்கவில்லை. ஊருக்குள் தன்னை ஒரு புகைப்படக் கலைஞராக மக்களிடத்தில் பதிவு செய்து கொண்டார். இலவசம் என்ற பெயரின் மூலமாக... படத்தை பிரதி செய்யும் செலவை மட்டும் பெற்று தனது திறமைகளை வெளிக்காட்ட ஊரை ஒரு களமாக பயன்படுத்திக் கொண்டார். ஒரு நாள் ஒரு அழைப்பு வந்தது தான் பிரபல்யம் அடைந்து விட்டதாக கருதி அந்த இடத்திற்கு சென்ற நா. முத்துக்குமாருக்கு காத்திருந்தது ஒரு அதிர்ச்சி! வறுமையின் விளிம்பிலும் கண்ணீரின் உச்சத்திலும் சூழ்ந்து இருந்த மக்கள் கூட்டத்தில் இருந்து ஒரு முதியவர் "வாயா வா போட்டோ எடுத்தா ஆயுசு குறைந்திடும் என்று சொன்னதால என் பேரன இதுவரைக்கும் நாங்க போட்டோ எடுத்ததே இல்ல ! இப்ப அவனுக்கு அஞ்சு வயசு செத்துப் புட்டான் போட்டோ உயிரோட்டமா இருக்கணும்னு தான் இன்னும் கண்கள் கூட மூடல எங்க குல கொழுந்து இ ஒரே வாரிசு எப்பவும் எங்க ஞாபகத்துல இருக்கிற மாதிரி ஒரு போட்டோ எடுத்து கொடு ராசா" என்று சொல்ல இதற்கு தெய்வத்தின் மீது கோபம் கொள்வதா? இல்லை யார் மீது கோபப்படுவது என்று தெரியாமல் மூடப் போகின்ற அந்த கண்களை படம் பிடித்தார் கவிஞர். அதிலிருந்து நா.முத்துக்குமார் செல்லும் விழாக்களில் எல்லாம் புகைப்படம் எடுக்கும் போது யாராவது சிரிக்கச் சொன்னால் அந்த சிறுவனின் கண்கள் நினைவுக்கு வருவதாக கூறி இருக்கிறார். இதற்குப் பின் அவருடைய புகைப்படங்களை எடுத்து பார்த்தேன் எல்லா புகைப்படங்களிலும் சிறு புன்னகை மட்டுமே!இவ்வளவையும் அழகாக கூறியவரை இனிமேல் பார்க்க முடியாது என்பதை அவரது ஒவ்வொரு கவிதைகளும் நினைவுப்படுத்துகின்றன.



பாத்திமா சபா
இரண்டாம் வருடம்,
ஊடககற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்

# வனம் பேசிய மொழிகள்

**இடை விடாது ஓடோடிக் கொண்டிருக்கும் மனித வாழ்க்கையில் ஒரு கட்டத்தில் சற்றேனும் நின்று ஒரு இடத்தில் ஓய்வெடுக்க நினைக்கும் நேரங்களில் எல்லாம் மனதில் தோன்றுவது இயற்கையின் நிழலில் எங்காவது தொலைந்து போக வேண்டும் என்பது தான். உண்மையில் இயற்கையின் மொழிகள் புரிந்து விட்டால் மனித மொழிகளின் தேவை எமக்கு இருக்காது.**




என் வாழ்க்கையில் என்னை மீறி இயற்கையின் எழிலில் என் மனதை பறிக்கொடுத்த ஓர் இடம்என்றால் அது இலங்கையில் வானம் தொடும் மரங்களால் போர்த்தப்பட்டுள்ள சிங்கராஜா வனம் என்பேன். எனக்கு அப்போது 15 வயது. வாழ்க்கையின் பொழுதுகளை இரசிக்க ஆரம்பிக்கும் வயது அது. அந்த வனம் நோக்கிய என் பயணமும் அந்த வயதில் தான் நிகழ்ந்தது.

அந்த வனம் பற்றிய வரலாற்று சிறப்புகளை நாம் அறிவோம். அதனால் அதனை சொல்ல நான் விரும்பவில்லை.

ஆயினும் இந்த இயற்கை வனத்தின் மகத்துவத்தை உணர்ந்தவள், இரசித்தவள் என்ற வகையில் இந்த கட்டுரையை எழுத ஆரம்பிக்கின்றேன். நிம்மதியின் நிழல் நாடும் இதயங்களுக்கும் தனிமையை சுகமாய் கடக்க நினைக்கும் இதயங்களுக்கும் நான் சொல்வது ஒன்று தான் ஒரு முறையேனும் இயற்கையின் மடியில் மனதை பறிக்கொடுத்துப் பாருங்கள்.

கானகத்தின் நடுவே கண் மயக்கும் காட்சிகள், என்னை தனி உலகத்திற்கு அழைத்துச் செல்வதாய்உணர்ந்த பொழுதுகள் என ஒவ்வொன்றையும் மீண்டும் மீட்டிப் பார்க்கையில் இன்றும் அந்த நினைவுகள் அழகோவியமாய் என் மனதில் பதிந்துள்ளன. மாயம் செய்யும் நதிகள், ஆழம் நிரம்பிய குகைகள், நீல நிற பூக்களால் அலங்கரிக்கப்படும் மேடுகள் என இயற்கையின் அதிசயங்களை தன்னகத்தே கொண்டுள்ளது சிங்கராஜா வனம். மனித மனங்களை கவர்வதில் இயற்கைக்கு இத்தனை சக்திகள் உண்டா என்று வியப்போடு எண்ணிக்கொண்டேன் அந்த தருணங்களில்.

சிங்கராஜ வனம், இலங்கையின் இயற்கை அழகின் முத்திரையைக் கொண்ட மகத்தான சூரிய மண்டலத்தின் ஓர் ஆச்சரியமான வனம். மேலும்அற்புதமான பசுமை நிலம், இயற்கையின் ஒளிவட்டம் நிறைந்த ஏராளமான காட்சிகள், பலவகை உயிரினங்கள், மலைகள், ஆறுகள், என்று இயற்கையின் வரங்களை கொண்டுகாணப்படும்இந்த வனம் இலங்கையின் மிகப்பெரிய மற்றும் பழமையான மழைக்காடாகவும் திகழ்கின்றது.



எங்கும் மூடுபனி நிறைந்த காடு, நீண்ட தூரங்களில் பசுமை விரிந்து செல்லும் காட்சிகள், வான் நோக்கி அசாதாரணமாய் வளர்ந்த மரங்கள், நிழலினுள் புல்லின் மீது தவழும் எறும்புகள், இதையெல்லாம் பார்க்கும் போது இயற்கையின் ஒற்றுமையை அங்கே உணர முடிகின்றது. ஒட்டுமொத்த இயற்கையின் அழகையும் இறைவன் இங்கே தான் புதைத்து வைத்திருப்பானோ என்று என்னுள்ளே உரையாடிக்கொண்டே அடர்ந்த கானகத்தின் நடுவே தோழியுடன் கைகோர்த்து நடந்தேன்.

இங்கு இருக்கும் ஒவ்வொரு மூடிய பூவும், ஒவ்வொரு அற்புதமான மூலிகையும் ஒன்று சேர்ந்து, வனத்தின் பிரம்மாண்டத்தைக் காக்குகின்றன. மேலும் இங்கு காணப்படும் செடிகள், மரங்கள், விலங்குகள், எல்லாம் இயற்கையின் அற்புதங்கள் என்றே சொல்வேன் இங்கு வாழும் குரங்கு, தும்பி, சிறிய பாம்புகள்போன்றவை, மனிதனுடன் கலந்துகொள்ளும் வண்ணம் தோற்றமளிக்கின்றன. இவை அனைத்துமேபார்ப்போரின்மனதை வசீகரிக்கின்றன.

இரவின் இருட்டினுள்ளும், வெண்ணிலவின் வெளிச்சத்தால் முத்துக்களை அள்ளிக் கொண்டு ஓடுவது போல் தோன்றும் அந்த வனத்தின்னுள் இருக்கும் ஆறுகளின்மொத்த அழகையையும் வார்த்தைகளால் வர்ணித்துவிட முடியாது.

அவ்வளவு ஆழம் இல்லாத வென் மனல்களின் சாம்ராஜ்யத்தை அந்த இரவின் கும் இருட்டிலும் வெண்ணிலவின் வெளிச்சத்தினால் ஆற்றினுள் காணக்கூடியதாக இருந்தது.

பாதங்களை நனைக்கும் போது அந்தஆற்றின் குளிர்ந்த நீர் என்னை தாலாட்டுவது போலும் கூடவேசலசலக்கும் ஓசையும் சங்கீத ஓசையாய் என் மனதை ஆற்றுப்படுத்தும் இனிமையையும் உணர்ந்தேன்.

இரவில் இருள் இருக்கையில், நட்சத்திரங்கள் நம்முடன் பேசுவது போன்ற எண்ணம், இரவின் நீலநிறம் கலந்த வானம், என்று அந்த ஓர் இரவும் என்னை கொஞ்சம் கொஞ்சமாக இயற்கை அன்னையின் அதிசயத்தில் மெய்சிலிர்க்க வைத்தது.

வனம் பேசும் வார்த்தைகளின் அர்த்தம் புரிந்தால் அங்கேயே இருந்து விடலாம் அல்லவா. இயற்கைக்குள் இருக்கும் இத்தனை இனிமையையும் புரிந்து கொள்ள எனக்கு அந்த ஒரு நாள் முழுதும் போதுமாய் இருந்தது.

ஆனால் அத்தனை எழில் மிகு காட்சிகளையும் அணுவணுவாய் அனுபவிக்க ஒரு கோடி நாட்களும் போதாது என்றே சொல்லலாம். காலை விடியலில் கண்ணை கசக்கி மூடித்திறந்தவளாய் வெளியே வந்தேன்.

கண்களுக்கு விருந்தாய் பல வண்ணங்களில் காட்டின் நடுவே மலர்ந்திருக்கும் பூக்கள் தலையசைத்து என்னை அழைப்பது போலும் பறவைகளின் ஒலிகள் மெல்லிசை கானங்கள் போலும் என்னை மனம் குளிர வைத்தது.

காலை நேரங்களில் சூரிய ஒளியில் குளிர்ந்த நீர்வீழ்ச்சிகள் காற்றில் பறவைகளைப் போல பறக்கின்றன.குளிர்ந்த நீரை கைகளால் தொட்டு அள்ளி, முகத்தினைக் கழுவும் போது நுட்பமான கண்ணாடி போன்று மின்னும் நீர் கண்களுக்கு இனிமை தருகின்றது.

நீளும் பசுமையான புல், மனதை மயக்கும் மலர்கள், மக்கள் வழிச் செல்லாத பாதைகள், அத்தனையும் இயற்கையின் வரவேற்பாக தோன்றியது.

இக்காடுகளை சுற்றி வரும் காற்று, அதன் நறுமணத்தை சுவாசிக்கும் போது மானுடனை இயற்கைக்கு நெருக்கமாக மாற்றுகின்றது. எண்ணிலடங்கா பறவைகளின் பாடல் மொழியோடு கலந்த இசைக்கு அமைவான வனம் மற்றும் விளையாட்டு விளையாடும் காற்றின் சுவாசத்தில்இபசுமையைத் தழுவும் தாவரங்கள் என்று ஒவ்வொரு அழகையும் அடுக்கிக் கொண்டே போகலாம்.

குறிப்பாக இந்த வனம், விலங்குகள், பறவைகள், மற்றும் பல சிறிய, பெரிய உயிரினங்களின் அடைவிடமாகும். இங்கு காணப்படும் மரங்கள், செடிகள், மற்றும் புல்வெளிகள் அனைத்தும் அனைவருக்கும் நிம்மதியான மனநிலையை தானாகத் தருகின்றன.

விலங்குகளின் ஆட்டமும், பறவைகளின் கூச்சலும், புழுக்களின் எளிமையான நடையுமே இந்த வனத்தின் உயிர்வாழ்வின் சாட்சி. மெதுவாக நடக்கும் போது நம்மீது ஒட்டிக் கொள்ளும் அட்டைகள் சிலருக்கு அச்சத்தை கொடுத்தாலும் நினைவுகளை மனதில் சுமப்பதற்கு கதை உருவாக்கி தருவதாக நான் உணர்ந்தேன்.

பல வண்ணங்களில் பறக்கும் பட்டாம்பூச்சிகளின் சிறகுகளின் இரகசியமும்பச்சோந்திகளின் அசைவுகளும் காணும் இடங்களில் எல்லாம் என் கண்ணை மயக்கும் விதமாய் அமைந்திருந்தது.

சிங்கராஜ வனத்தின் ஒவ்வொரு மூலையிலும், புதிய அழகை கண்டறியலாம். அதன் மலைகளின் உயரம், ஆற்றின் ஆழம், பசுமை நிறைந்த காடுகள், எல்லாமே மனிதனைச் சிந்திக்க வைக்கின்றன.

மாலை நேரங்களில் சூரியன் மறைந்து கொண்டிருக்கும் போது, அதன் மஞ்சள் வெளிச்சம் கானகத்தின் பச்சை வண்ணத்தை ஒளிரச் செய்கிறது. மண்ணிலிருந்து வேர்களாக மேலெழுந்து, வானத்தை முட்டுவது போல் காணப்படும் மரங்கள், பச்சைக் கானகத்தில் தனது முழு அழகையும் பறைசாற்றுகின்றன.

அந்த மரங்களில் கூடு கட்டி வாழும் வண்ணப் பறவைகள், பறந்தோடிக் கொண்டே வனத்தின் அமைதியைப் போக்குகின்றன. விட்டு விட்டுத் தூவிக் கொண்டிருக்கும் மழைத்துளிகள் நம் மேனியில் பட்டு புத்துணர்ச்சி தரும் நேரங்களில் நம் மௌனம் பேசும் மொழியும்அசைந்தாடும் காற்றின் பாடலும் ஆயிரம் அர்த்தங்களை தருகின்ற விதமாய் அந்த சூழலை இரசிக்கச் செய்தது.

குறிப்பாக இங்குவாழும் உயிரினங்கள், உலகத்தின் மற்ற எங்கும் காணப்படாத அரிய வகைகளாகவும் இருக்கின்றன. அவை, இந்த அற்புதமான பூமியில், மனிதரின் தொல்லைகள் யாவற்றையும் மறந்து,சுதந்திரமான வாழ்வினை வாழ்கின்றன. காற்றின் எளிமையான காற்றோட்டம் கூட அங்கு வாழும் உயிரினங்களின் ஒலிகளால் நிறைந்துள்ளது.

நறுமணம் வீசும் அந்தகானகத்தில் கால் வைத்துப் பாருங்கள், ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு செடியும் நம் காதோரம் ஆயிரம் கதை சொல்லும். நிம்மதியற்றுத் திரியும் மனித மனங்களே இறைவன் தந்த இயற்கையின் அருட்கொடைகளைஅனுபவிக்கத் தவறாதீர்.

ஆண்டுகள் பல கடந்தும் இன்றும் என் நினைவை விட்டு நீங்காத நினைவாய் உருண்டோடிக் கொண்டிருக்கின்றது. வனத்தின் நடுவே என்னை மறந்து இயற்கையின் அழகில் பிரமித்துப் போன அந்த நாட்கள்.





ராஜஸ்தான்

# விபத்தில்

## 8 சிறுவர்கள் உட்பட 12 பேர் பலி

ராஜஸ்தானில், சனிக்கிழமை (19) இரவு இடம்பெற்ற விபத்தில், 8 சிறுவர்கள் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

குவாலியரில் இருந்து ஜெய்ப்பூர் நோக்கி சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று, தோல்பூர் மாவட்டத்தில் உள்ள சுனிபூர் அருகே வந்துகொண்டிருந்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, அவ்வழியாக வந்த மாறி ஒன்றுடன் மீது மோதி விபத்துக்குள்ளானது.

பஸ் சாரதி அதிக வேகமாக வந்ததே விபத்துக்கு காரணம் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது..

உயிரிழந்த சிறுவர்கள் 6 முதல் 14 வயதுக்கு. இடைப்பட்டவர்கள் எனவும், உயிரிழந்தவர்களில் தம்பதி ஒன்று உள்ளடங்குவதாகவும், அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிடப்பட்டுள்ளன.

காஷ்மீர்

### ஜம்மு காஷ்மீர்

# மாநிலமாக மாற்றப்படும்?

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்க வலியுறுத்திய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து, இந்த தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்படும் அரசியலமைப்பின் 370-வது சட்டப்பிரிவை மத்திய அரசு நீக்கியது. மாநிலமாக இருந்த ஜம்மு காஷ்மீர் 2 யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டது.

ஜம்மு காஷ்மீர் ஒரு யூனியன் பிரதேசமாகவும், லடாக் மற்றொரு யூனியன் பிரதேசமாகவும் பிரிக்கப்பட்டது. இதில் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் மட்டும் சட்ட சபை தொகுதிகள் உள்ளன. லடாக்கில் சட்டசபை தொகுதிகள் இல்லை.

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் உள்ள 90 சட்டசபை தொகுதிக்கு சமீபத்தில் நடந்த தேர்தலில், தேசிய மாநாட்டு கட்சி- காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றது. ஜம்மு காஷ்மீர் முதல்-மந்திரியாக தேசிய மாநாடு கட்சி துணைத் தலைவர் உமர் அப்துல்லா பதவி ஏற்றார்.

அவரது தலைமையில் நடந்த முதல் மந்திரிசபை கூட்டத்தில் ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்க வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானம் ஒப்புதலுக்காக துணை நிலை கவர்னர் மனோஜ் சின்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவரும் ஒப்புதல் வழங்கியுள்ளார்.



இதையடுத்து, இந்த தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு இதற்கு அனுமதி வழங்கும் பட்சத்தில் மீண்டும் ஜம்மு காஷ்மீர் மாநிலமாக மாற்றப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, உமர் அப்துல்லா விரைவில் டெல்லி சென்று பிரதமர் நரேந்திர மோடி, மத்திய மந்திரி அமித்ஷாவை சந்திக்கிறார்.

ஜம்மு காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து வழங்க கோரிக்கை வைக்கிறார். தற்போதைய சூழலில் மத்திய அரசு மீண்டும் ஜம்மு காஷ்மீரை மாநிலமாக்க ஒப்புதல் அளிக்காது என்றே கூறப்படுகிறது.

காஷ்மீர் சட்டசபையில் முதல் கூட்டம் நவம்பர் 4ஆம் திகதி தொடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல்

### ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு நேதன்யாகு

# எச்சரிக்கை

பெரும் தவறு செய்துவிட்டீர்கள் என ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாலஸ்தீனம் மற்றும் லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், இரு நாடுகளில் ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புகளின் தலைவர்கள் அடுத்தடுத்து கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் படைகளுடன் லெபனான் எல்லையில் சண்டை இட்டு வரும் ஹிஸ்புல்லா, இஸ்ரேலின் உட்புற பகுதிகள் மீதும் டிரோன் தாக்குதல் நடத்தி வருகிறது.

லெபனானில் இருந்து, சனிக்கிழமை (19) ஏவப்பட்ட டிரோன்கள் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவின் குடியிருப்பு அமைந்துள்ள செசாரியா நகர் மீது தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலில் உயிரிழப்புகள் ஏற்படவில்லை என, இஸ்ரேல் பாதுகாப்பு படை உறுதி செய்தது.

இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு எக்ஸ் வலைதளத்தில் செய்தியொன்றை வெளியிட்டுகால்.

அந்த செய்தியில், பெரும் தவறு செய்துவிட்டீர்கள் என ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், "இன்று என்னையும் எனது மனைவியையும் படுகொலை செய்ய ஈரானின் பினாமி ஹிஸ்புல்லா மேற்கொண்ட முயற்சி ஒரு பெரிய தவறு.

"இது என்னையும், இஸ்ரேல் அரசையும் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக எதிரிகளுக்கு எதிரான நமது நியாயமான போரை தொடர்வதிலிருந்து தடுக்காது.

"ஈரானுக்கும் அதன் தீமையின் அச்சில் உள்ள அதன் பினாமிகளுக்கும் சொல்கிறேன், இஸ்ரேல் மக்களுக்கு தீங்கு விளைவிக்க முயற்சிக்கும் எவரும் பெரும் விலை கொடுக்க வேண்டும். பயங்கரவாதிகளையும், அவர்களை அனுப்புபவர்களையும் ஒழிப்போம்.

"எங்கள் பிணைக்கைதிகளை காசாவில் இருந்து வீட்டுக்கு அழைத்து வருவோம். நமது வடக்கு எல்லையில் வசிக்கும் குடிமக்களை பாதுகாப்பாக அவர்களது வீடுகளுக்கு திருப்பி அனுப்புவோம்.

"நமது போர் நோக்கங்கள் அனைத்தையும் அடைய இஸ்ரேல் உறுதியாக உள்ளது" என தெரிவித்துள்ளார்.



### முதலாவது டெஸ்டில்

# இந்தியாவை வென்ற நியூசிலாந்து

இந்தியாவுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், பெங்களூருவில் புதன்கிழமை (16) ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை (20) முடிவுக்கு வந்த முதலாவது போட்டியை நியூசிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 46/10 (பந்துவீச்சு: மற் ஹென்றி 5/15, வில்லியம் ஓ ரூர்க் 4/22, டிம் சௌதி 1/8)

நியூசிலாந்து: 402/10 (துடுப்பாட்டம்: றஷின் றவீந்திர 134, டெவோன் கொன்வே 91, டிம் சௌதி 65, வில் யங்க் 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவீந்திர ஜடேஜா 3/72, குல்தீப் யாதவ் 3/99, மொஹமட் சிராஜ் 2/84, ஜஸ்பிரிட் பும்ரா 1/41, இரவிச்சந்திரன் அஷ்வின் 1/94)



இந்தியா: 462/10 (துடுப்பாட்டம்: சஃப்ராஸ் கான் 150, றிஷப் பண்ட் 99, விராட் கோலி 70, றோஹித் ஷர்மா 52, யஷஸ்வி ஜைஸ்வால் 35 ஓட்டங்கள். பந்துவீச்சு: வில்லியம் ஓ ரூர்க் 3/92, மற் ஹென்றி 3/102, அஜாஸ் பட்டேல் 2/100, டிம் சௌதி 1/53, கிளென் பிலிப்ஸ் 1/69)

நியூசிலாந்து: 110/2 (துடுப்பாட்டம்: வில் யங்க் ஆ.இ 48, றஷின் றவீந்திர ஆ.இ 39 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜஸ்பிரிட் பும்ரா 2/29)

போட்டியின் நாயகன்: றஷின் றவீந்திர

### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# போர்ண்மெத்திடம் தோற்ற ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், போர்ண்மெத்தின் மைதானத்தில் சனிக்கிழமை (19) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் தோற்றது.

போர்ண்மெத் சார்பாக றயான் கிறிஸ்டி, ஜஸ்டின் கிளைவெட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

ஏற்கெனவே அணித்தலைவர் மார்டின் ஒடெகார்ட், புகாயோ ஸாகாவை உபாதையால் இழந்துள்ள ஆர்சனல், இப்போட்டியின் முதல் பாதியில் பின்களவீரர் வில்லியம் சலிபாவுக்கு சிவப்பு அட்டை காட்டப் பெற்ற நிலையில் எஞ்சிய நேரம் 10 பேருடனே விளையாடியிருந்தது.



### பங்களாதேஷ் எதிர் தென்னாபிரிக்கா:

# இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்



பங்களாதேஷ், தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியானது மிர்பூரில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரே ஷகில் அல் ஹஸன் இல்லாமல் பங்களாதேஷ் களமிறங்கப் போகும் முதலாவது தொடராக அமைக்கின்ற நிலையில் ஷகிப்பின் பாரிய இடைவெளியை நிரப்ப வேண்டிய பொறுப்பு மெஹிடி ஹஸன் மிராஸுக்கு காணப்படுகின்றது.

மிர்பூர் ஆடுகளமானது சுழற்பந்துவீச்சுக்கே சாதகமானதாக காணப்படுமென்ற நிலையில் தஜியுல் இஸ்லாம், நயீம் ஹஸன் ஆகியோர் மெஹிடியுடன் களமிறங்குவரென எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்காவைப் பொறுத்த வரையில் அவ்வணியின் தலைவர் ஏய்டன் மார்க்ரமிலே பாரிய பொறுப்பு காணப்படுவதுடன், டெவால்ட் பிறெவிஸ் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தவிர கேஷவ் மஹராஜ்ஜுடன், டேன் பீடிட்டும், செனுரன் முத்துசாமியும் ககிஸோ றபாடா, வியான் முல்டர் பந்துவீச்சு வரிசைப் பூர்த்தி செய்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

### இத்தாலிய சீரி ஏ தொடர்:

# லேஸியோவை வென்ற ஜுவென்டஸ்

இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (20) நடைபெற்ற லேஸியோவுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் வென்றது.

ஜுவென்டஸுக்கு கிடைத்த கோலானது ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 21 ஒக்டோபர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.